# <u>ஊர்தி கடன் ஒப்பந்தம்</u>

இந்த ஒப்பந்தம் ---------------------- ல் ------------------- அன்று

இங்கு குறிப்பாக விவரிக்கப்பட்டு மற்றும் இங்குள்ள அட்டவணையில் சொல்லப்பட்ட வாங்குவோர், கூட்டாக வாங்குவோர், கூட்டாக விண்ணப்பதாரர் (இனி இங்கு வாங்குவோர் எனக் குறிப்பிடப்பெறும்) மற்றும் இங்கு குறிப்பாக விவரிக்கப்பட்ட இங்குள்ள அட்டவணையில் சொல்லப்பட்ட பொறுப்புறுதியாளர்/கள் (இனி இங்கு பொறுப்புறுதியாளர் என அழைக்கப்பெறும்) அந்த சொல் மாறாக இங்கு சூழ்நிலையில் அல்லது பொருளில் கூறப்படாதவரை அவன் / அவள் / அவர்கள் / அதன் உரிய வாரிசுகள், செயல்படுத்துவோர், நிர்வாகிகள், நியமனதாரர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட பூர்வ பிரதிநிதிகள் அதன் பொருளை உள்ளடக்கியதாக இருக்கும் (எங்கு வாங்குவோர் / பொறுப்புறுதியாளர் கம்பெனியாக / உரிமையாளராக உள்ளனரோ) அவ்வாறாக ஆதாயம் பெறும் தொடாச்சியாளர் (எங்கு கம்பெனிகள் சட்டம் 1956ன் படியான கம்பெனி அல்லது எந்த குழுமம் ஆக வாங்குவோர் / பொறுப்புறுதியாளர் இருந்தால்) நிறுவனத்தில் அவ்வப் போதைய கூட்டாளிகள் அவர்களில் உயிருடனிருப்பவர் மற்றும் அவர்களது சட்டபூர்வ வாரிசுகள், செயல்படுத்துவோர், நிர்வாகிகள், சட்டப் பிரதிநிதிகள், நியமனதாரர்கள் மற்றும் கூட்டாளிகளின் தொடர்ச்சியாளர்கள் (எங்கு வாங்குவோர் / பொறுப்புறுதியாளர் கூட்டாண்மை நிறுவனமாக இருந்தால்) ஒரு நபராகவும்

மற்றும்

கம்பெனிகள் சட்டம், 1956ன் கீழ் பதிவு செய்யப்பெற்ற ஒரு கம்பெனியும், பூனா 411 035, ஆகுர்டி மும்பை பூனா சாலையில் பதிவு அலுவலகமும் மற்றும் நாட்டில் பல்வேறு இடங்களில் கிளையும் மற்றும் மண்டல அலுவலகமும் உடைய (அச்சொல் மாறாக சொல்லப்பட்டு பொருள் கொள்ளாத வரையில் அது அதன் தொடர்ச்சியாளர்கள், நிர்வாகிகள் மற்றும் ஒதுக்கீட்டிடைக் குறிக்கும்) பஜாஜ் பினான்ஸ் லிமிடெட் கம்பெனி (இனி பி.எப்.எல் என அழைக்கப்பெறும் மற்றொரு நபராகவும்)

எழுதிக் கொள்ளப்பட்டது

அட்டவணை பகுதி ''பி''யில் குறிப்பாக விவரிக்கப்பட்ட பகுதி ''ஏ''யில் கூறப்பட்ட பஜாஜ் ஆட்டோ லிமிடெட்-ன் விற்பனையாளர் / அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரிடமிருந்து வாங்குவதற்கு நிதி உதவி வாங்குவோருக்குத் தேவைப்படுகிறது என வாங்குவோர் பி.எப்.எல்-டம் கூறி / கோரியுள்ளார் மற்றும் ரூ. -------/- (ரூபாய் ---------------------- மட்டும்). அப்பொருளின் முழு / பகுதி வாங்குதல் விலைக்காக கடன் / நிதி உதவி வாங்குவோருக்கு வழங்க பி.எப்.எல்-ஐக் கேட்டுக் கொண்டுள்ளார். அதற்கு, குறிப்பிட்ட மாத தவணையில் உரிய வட்டியோடு வழங்க பிஎப்எல் இசைந்துள்ளது (வாங்குவோரால் சரியாக பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பமிடப்பட்டு விண்ணப்ப படிவம் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில்) மற்றும் வரையீடுகள், நிபந்தனைகள், ஆவணங்கள் மற்றும் / அல்லது இங்கு இனி காணப்படும் குறிப்பானை, வரையறைகளின் பேரில் வாங்குவோர் அட்வான்ஸ் தர இசைந்துள்ளது (இனி வழங்கப்பட்ட கடன் & அட்டவணையில் முழுதுமாக மேலும் விவரிக்கப்பட்டவாறு). அவர்களுக்கு / அவளுக்கு பிஎப்எல்-ன் இந்த கடன் ஒப்பல் / நிதி உதவியினை வாங்குவோர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தோர், பொறுப்புறுதியாளர் ஒப்புக் கொள்கின்றனர்.

## I **வரையறை விளக்கம் மற்றும் சுருக்கக் குறிப்புகள்**

1. ''விண்ணப்ப படிவம்'' என்பது, இந்த வசதியை துய்ப்பதற்காக விண்ணப்பிக்க, முதன்மை கடன் வசதி / மதிப்பீடு விண்ணப்ப படிவதத்துடன் கூட மற்றும் எல்லா பிற தகவல்கள், விபரங்கள், தெளிவுரைகள், கடிதங்கள் மற்றும் உறுதிமொழி மற்றும் விளம்புகை ஏதேனுமிருப்பின் வாங்குவோரால் அல்லது பிற எந்த நபர்களால் அவ்வப்போது அந்த நிதி / கடன் வசதி நீட்சி செய்வது தொடர்பாக பிஎப்எல்-க்கு வாங்குவோரால் இப்பொருளில் அனுமதித்து / தேவைப்பட்டு சமர்ப்பிக்கப்படும். கடன் வசதி விண்ணப்ப படிவம் என்பதைக் குறிக்கும்.

2. ''சுய பற்று கட்டளை'' இனி ''ஏடிஎம்'' என அழைக்கப் பெறுவது என்பது பிஎப்எல் கணக்கில் வரவு வைக்க தவணை முறையை வசதியாக வங்கியில் செலுத்த எழுத்து மூலமாக இசைவு தந்து வாங்குவோர் வழங்கும் அறிவுரை(கள்)/ கோரிக்கையின் படி வாங்குவோர் கணக்கிலிருந்து குறைப்பது உள்ளிட்டதே இனிக் குறிப்பிடப்படும் எனக் கருதப்படும்.

3. ''வாங்குவோர்'' என்பது, நிதி / கடன் வசதியைத் துய்ப்பதற்காக பிஎப்எல்-டம் அத்தகைய மனுதார்கள் மற்றும் கூட்டு மனுதாரர்கள்/ கூட்டாக வாங்குவோரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தின் அடிப்படையில் பிஎப்எல் ஆல் கூட்டாக மற்றும் தனியாக மனுதாரர் மற்றும் கூட்டு மனுதாரர் / கூட்டாக வாங்குவோருக்கு (ஏதேனுமிருப்பின்) வழங்கப்பட்ட / ஒப்புதல் தரப்பட்டது உள்ளிட்டவற்றை மற்றும் அதனைக் குறிக்கும் மற்றும் வாங்குவாரின் தன்மையைச் சார்ந்து கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.
   (1) அதன் தொடர்ச்சியாளர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு, வாங்குவோர்
   (1) அதன் தொடர்ச்சியாளர் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு, கம்பெனிகள் சட்டம் 1956ன் படி வாங்குவோர் கம்பெனி என பொருள் கொள்ளப்பட்டால் அல்லது சங்கங்கள் தொடர்பான பொருந்தக் கூடிய சட்டத்தின் கீழ பதிவு செய்யப்பட்ட சங்கமாக இருந்தால்

(2) 1932 இந்திய கூட்டாண்மை சட்டத்தின் பொருளில் வாங்குவோர் கூட்டாண்மை நிறுவனமாக இருந்தால் ஒரு நிறுவனம் எந்த அல்லது ஒவ்வொரு கூட்டாளி மற்றும் அதன் உயிருடன் உள்ளோர் அல்லது அவ்வப்போதுள்ள கூட்டாளிகள் மற்றும் அவர்களின் சம்பந்தப்பட்ட வாரிசுகள், சட்ட பூர்வ பிரதிநிதிகள், செயலாற்றுவோர், நிர்வாகிகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டாளர்கள் ஆகியோர்.

(3) வாங்குவோர் தனி நபர் மற்றும் / அல்லது தனி நிறுவனமாக வணிகத்தை நடத்தி வந்தால் அவர் / அவன் வாரிசுகள், சட்டபூர்வ பிரதிநிதிகள், செயலாற்றுவோர், நிர்வாகிகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டாளர்.

4. ''வாங்குவோர் உரிய நிலுவை'' என்பது, கடன் வரையீடுகள் மற்றும் நடவடிக்கை ஆவணங்களில் கண்டுள்ளவாறு வாங்குவோரால் பிஎப்எல்-க்கு செலுத்தப்பட வேண்டிய நிதி / கடன் வசதியில் நிலுவையாக உள்ள அசல் தொகை, இந்த வசதி மீதான வட்டி, எல்லா பிற வட்டி, எல்லா கட்டணம், செலவுகள், தீர்வைகள், செலவினம் முத்திரைக் கட்டணம் மற்றும் எவ்விதமான எல்லா பிற தொகைகள் மற்றும் அதே போல் கடன் வரையீடுகளின் படி வாங்குவோரால் செலுத்தப்பட வேண்டிய அல்லது குறிப்பிடப்பட்ட பிற எல்லா தொகையினையும் உள்ளடக்கியதாக இருக்கும்.
5. ''தவறுதல் வட்டி'' என்பது, இந்த ஒப்பந்தத்தின் வகைப்பாடு 3(iv)ன் கீழ் சொல்லப்பட்ட பிஎப்எல்-ஆல் விதிக்கப்பட்ட வட்டி உரிய நாளிலிருந்து செலுத்தும் வரை தவறும் போது ஏற்படக் கூடியதைக் குறிக்கும்.
6. ''நேரடியாக தொகை வசூல்'' இனி ''டிசிசி'' என அழைக்கப்படுவது, பஜாஜ் ஆட்டோ லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட வெளியிடங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பிஎப்எல் பிரதிநிதி / முகவர் மூலம் தொகை வசூல் செய்வதை உள்ளடக்கியதாக கருதப்படும்.
7. ''உரிய நாள்'' என்பது நடவடிக்கை ஆவணங்களில் குறிப்பிட்டவாறு கடனின் அசல் தொகை, வட்டி மற்றும் / அல்லது எந்த பிற தொகைகள் உள்ளிட்டவை உரிய நாளில் வாங்குவோரால் செலுத்தாமல் இருப்பதைக் குறிக்கும்.
8. ''வழங்குமிடத்தில் பிடித்தம் செய்தல்'' இனி ''டிஏஎஸ்'' என அழைக்கப் பெறுவது முதலாளியால் (இஎம்ஐ மாதாந்திர தவணைகளில்) பிடித்தம் செய்யப்பட்டு மற்றம் பிஎப்எல்/ அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியிடம் செலுத்தப்படுவது உள்ளிட்டவற்றைக் குறிப்பதாக கருதப்படும்.
9. ''மின்னனு தீர்வு முறை'' என்பது இனி ''இசிஎஸ்'' என குறிப்பிடப்படுவது, நிதியினை மின்னணு முறை மூலம் மாற்றுவது, மின்னணு முறை மூலம் தகவல் வழியாக நிதியினை மாற்றுவது அல்லது மின்னணு முறை மூலம் பத்திர உருவு மூலம் நிதியினை மாற்றுவது அல்லது நிதிகள் விவரங்கள் அடங்கிய மின்னணு கோப்பின் வழியாக மின்னணு ஊடகம் வழியாக மாற்றுதல் அல்லது மின்னணு காசோலை வழியாக செலுத்துதல் அல்லது பல்வேறு வகை நெகிழி அட்டை மூலம் நிதி மாற்றப்படுவது அல்லது இந்திய ரிசர்வ் வங்கியால் அறிவிப்பு செய்யப்பட்ட அத்தகைய பிற பற்று தீர்வு பணி, வாங்குவோர் தவணைகள் செலுத்த வசதியாக எழுத்து மூலம் சம்மதித்து எழுதிக் கொடுத்த பங்கேற்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக் கருதப்படும்.
10. ''மின்னணு செலுத்துதல்'' என்பது இனி அவ்வப்போது இந்திய ரிசர்வ் வங்கியால் விவரிக்கப்பட்டவாறு இணையதளம், இயக்க நிலை, அலைபேசி, மினனணு பர்ஸ், மின்னணு வால்லட், நிலை அட்டை, பிற போன்ற மின்னணு வகைப்பாடு பயன்படுத்துவதன் வழியாக செலுத்துதலை உள்ளடக்கியதையும் குறிக்கும்.
11. ''பொறுப்புறுதியாளர்'' என்பவர், இந்த ஒப்பந்தம் மற்றும் அதன் அட்டவணையில் கூறப்பட்ட வாங்குவோரின் கடனுக்கு பொறுப்புறுதியாக நிற்கும் எந்த நபரையும் பொறுப்புறுதியாளரின் கீழக்கண்ட தன்மையைச் சார்ந்து உள்ளடக்கியதைக் குறிக்கும். (1) அதன் தொடர்ச்சியாளர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டாளர் (2) கம்பெனி சட்டம் 1956ன் பொருளில் கண்டவாறு கம்பெனியாக அல்லது சங்கங்கள் தொடர்பான பொருந்தக் கூடிய சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமாக பொறுப்புறுதியாளர் இருந்தால் அதன் தொடர்ச்சியாளர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டாளர்கள் (2) இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932ன் கீழுள்ள பொருளில் கூட்டாண்மை நிறுவனமாக பொறுப்புறுதியாளர் இருந்தால், ஏதாவது நிறுவனம் அல்லது கூட்டாளிகள் ஒவ்வொருவரும் மற்றும் அவர்களில் உயிருடன் உள்ளோர் அல்லது அவ்வப்போது உள்ள கூட்டாளிகள் மற்றும் அவர்களின் சம்பந்தப்பட்ட வாரிசுகள், சட்டபூர்வ பிரதிநிதிகள், செயல்படுத்துவோர், நிர்வாகிகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டாளர்கள் (3) பொறுப்புறுதியாளர் தனி நபர் மற்றும் / அல்லது தனி உரிமையாளராக வணிகம் செய்தால் அவன் / அவள் வாரிசுகள், சட்ட பூர்வ பிரதிநிதிகள், செயல் படுத்துவோர், நிர்வாகிகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டாளர்கள். பொறுப்புறுதியாளர் கடனாளியாக கருதப்படுவார்.
12. ''தவணை(கள்) / இஎம்ஐ'' என்பது கடன் தொகை செலுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட கால வரையறையில் சமமாகப் பிரிக்கப்பட்ட அல்லது சமனற்ற தவணையில் நபர்களிடையே ஒப்புக் கொண்டவாறு மாதாந்திர / காலாண்டு அல்லது பிற எந்த இடைவெளியில் நிலுவை குறைப்பு வீதத்தில் கணக்கிடப்பட்ட அசல் மற்றும் வட்டி அடங்கிய தொகையைக் குறிப்பதாகும். சமன் அல்லது சமனற்ற தவணைகள் கணக்கீடு குறிப்பாக அட்டவணை பகுதி ''ஏ''ல் விளக்கப்பட்டிருக்கும்.
13. ''வட்டி'' என்பது பொருந்தக்கூடிய நிலை வட்டி வீதம் அல்லது மிதவை வட்டி வீதம் என்பதைக் குறிக்கும்.
14. ''கடன்'' என்பது, அந்தக் காரணத்துக்காக கடன் வரையீடுகளின்படி வாங்குவோருக்கு பிஎப்எல்-ஆல் வழங்கப்பட்ட தொகை மற்றும் இந்த ஒப்பந்தத்தின் வரையீடுகள் மற்றும் நிபந்தனைகளின்படி பிஎப்எல்-க்கு வாங்குவோரால் செலுத்த வேண்டிய மற்றும் உரிய எந்த பிற தொகை எல்லாவற்றையும் உள்ளடக்கியதைக் குறிக்கும்.
15. ''பி.டி.சி'' என்பது பின் தேதியிட்ட காசோலை, ஒவ்வொரு தவணையைப் பொருந்தும் வகையில் நாளிட்ட தவணைத் தொகைக்கான பிஎப்எல்-க்குச் சாதகமாக வாங்குவோரால் முன்னமே தரப்பட்ட காசோலையைக் குறிப்பதாகும்.
16. ''பொருள்'' என்பது பகுதி பி அட்டவணையில் வாங்குவோரால் தரப்பட்ட விவரங்களின்படி உள்ள பொருளைக் குறிக்கும் மற்றும் அதனுடைய எல்லா கூடுதல்கள் மற்றும் அதன் இணைப்புகள் இந்த ஒப்பந்தத்தின் நாளுக்கு முன்னர் அல்லது பின்னர் ஏற்படுத்தப்பட்ட எல்லா பதிலிகள் மற்றும் புதுப்பித்தலையும் உள்ளடக்கியது.
17. ''அபராத தீர்வை'' என்பது உரிய நாளில் தவணை செலுத்தாமைக்கான உரிய நாள் தாண்டிய தீர்வை என்பதை உள்ளடக்கியதைக் குறிக்கும்.
18. ''மீட்புத் தீர்வை'' என்பது இஎம்ஐ தீர்க்க (மாதாந்திர தவணை) வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர் / கூட்டாக வாங்குவோரால் பின் தேதியிட்ட காசோலை / இசிஎஸ் / ஏடிஎம் / ஒப்படைக்கப்பட்டவை ஏற்கப்படாதற்கான அல்லது பிற வகை செலுத்துதலில் உரிய நாட்களில் அல்லது அதற்கு முன்னர் தவணை செலுத்தத் தவறியதையும் குறிக்கும்.
19. ''அட்டவணை'' என்பது இந்த ஒப்பந்தத்தின் பகுதியாக அமைந்துள்ள வாங்குவோருக்குத் தரப்பட்ட கடன் / நிதி வசதி குறித்த முழு விவரங்களையும் குறிப்பது.
20. ''அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்'' பஜாஜ் ஆட்டோ லிமிடெட் ஆல் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பிஎப்எல் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண்மை நிறுவனம் / தனியுரிமை நிறுவனம் / பொது / தனியார் லிமிடெட் கம்பெனி.

## II கடனின் வரையீடுகள்

1. கடன் வழங்கும் நடைமுறைகள் வாங்குவோர் அறிந்து கொண்டுள்ளார். பஜாஜ் ஆட்டோ லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் அல்லது அவரது ஆணையின்படி பிஎப்எல்-லிருந்து வழங்கப்பட்ட நிதி உதவி மாற்றப்பட்டு வழங்குதல் செயல்படுத்தப்பட்டது என்பதை வாங்குவோர் ஒப்புக் கொள்கிறார்.
2. இந்த நிதி / கடன் வசதியின் கீழ் பொருந்தக் கூடிய திருப்பித் தர முடியாத முன் வட்டி / பணித் தீர்வகைள் மற்றும் பிற தீர்வைகளை வாங்குவோர் ஒரு முறை செலுத்த வேண்டும். அந்த முன் வட்டி / பணித் தீர்வைகள் மற்றும் இதர தீர்வைகள் அந்த வசதி / கடன் துய்க்கப்படும் போது விற்பனையாளருக்கு கடன் தொகை வழங்கப்படும் போது பிஎப்எல் ஆல் பிடித்தம் செய்து கொள்ளப்படும்.
3. வாங்குவோர் கீழ்க்கண்டவற்றை ஒப்புக் கொண்டு மற்றும் உறுதி செய்கிறார்.

(1) பிஎப்எல் ஆல் முடிவு செய்தவாறு அத்தகைய தவணைகளில் அல்லது ஒரே தவணையில் வாங்குவோர் / விற்பனையாளருக்கு பிஎப்எல் ஆல் ஒப்பளிக்கப்பட்ட கடன் வழங்கப் பெறும்.

(2) அட்டவணை பகுதி ஏ யில் குறிப்பிட்ட உரிய முதல் தேதியிலிருந்து --------------- மாதங்களில் ஒப்பளிக்கப்பட்ட கடன் வாங்குவோரால் திரும்பச் செலுத்தப் பெறும்.

(3) ஒப்பளிக்கப்பட்ட கடனை (நிதி உதவித் தொகை)வாங்குவோர் சார்பாக விற்பனையாளருக்கு நேரடியாக செலுத்த பிஎப்எல் இங்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இங்கு அட்டவணை பகுதி ''ஏ'' யில் குறிப்பிட்ட நிலுவை குறைப்பு விகிதத்தின் மீது நிதித் தீர்வை / வட்டி ஆகியவற்றுடன் பிஎப்எல்-க்கு வாங்குவோரால் கடன் நிலுவை என ஒப்பந்தத்தில் கண்டவரையீடுகளின்படி திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் மற்றும் வாங்குவோர் இதனை உறுதி செய்கிறார்.

(4) தவறுதல் நிகழும் போது தண்டனைத் தீர்வை கீழ்க்கண்டவாறு விதிக்க பிஎப்எல்-க்கு உரிமை உண்டு

(1) அட்டவணை வகைப்பாடு பி ன்படி ஒவ்வொரு திரும்பவரப் பெற்றதற்கும் ரூ.350/- வரை திரும்ப வந்ததற்கான தீர்வை

(2) அட்டவணை வகைப்பாடு ''பி'' ன்படி விவர அடிப்படையில் உரிய நாளிலிருந்து செலுத்தப்படும் நாள் வரை, தொகை நிலுவை தொடர்ந்து செலுத்தாமைக்கு நிலுவைத் தொகைக்கு மாதத்திற்கு 3%க்கு மிகாமல் தண்டனைத் தீர்வை.

(3) பிஎப்எல் முழுதும் மற்றும் இறுதியாக அந்த கடன் நடவடிக்கை திருப்தியுறும் வரையில் அட்டவணை ''பி'' யில் முழுதும் விவரிக்கப்பட்டவாறு அந்தப் பொருள் பிணையமாக இருக்கும் என்பதை வாங்குவோர் முழுதும் அறிவார்.

4. அந்தப் பொருள் வாங்குவதற்கும் மற்றும் அதன் தொடர்பான செலவினங்களைச் செலுத்த மட்டுமே ஒப்பளிக்கப்பட்ட கடனை வாங்குவோர் பயன்படுத்த வேண்டும்.
5. அட்டவணை ஏல் தரப்பட்ட / ஒப்புக் கொள்ளப்பட்ட மாதாந்திர தவணைகளில் அசல் (நிதி உதவித் தொகை) மற்றும் நிதித் தீர்வை / வட்டி ஆகியவற்றை வாங்குவோர் செலுத்த வேண்டும்.
6. நிதித் தீர்வைகள், குறையும் நிலுவை முறையில் சேரும் மற்றும் ஒவ்வொரு தவணை இறுதியில் உள்ள அசல் நிலுவை தள்ளிப்போகும்.
7. எந்த வீதம், வரிகள், தீர்வைகள், விதிப்புகள், கட்டணங்கள் மற்றும் தொகை எவ்விதமிருந்தாலும் அதில் ஏற்படும் உயர்வு காரணமாக அல்லது தவணைகளில் விதிக்கப்படும் அல்லது இங்குள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில் அல்லது இருந்தால் அல்லது இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தியது காரணமாக பிஎப்எல்-ஆல் செலுத்தப்பட வேண்டியது ஆகியவற்றால் தவணை தாமாக உயர்ந்துவிடும். மேலே கூறப்பட்டவாறு வீதம், வரிகள், தீர்வைகள், விதிப்புகள், கட்டணங்கள் மற்றும் தொகையில் ஏற்படும் அத்தகைய உயர்வுகள் தாமாகவே ஒப்பளிக்கப்பட்ட கடனின் பகுதியாக அமைந்துவிடும் மற்றும் வாங்குவோர் பொறுப்புறுதியாளர் எந்த அறிவிப்புமின்றி இதற்கு ஒப்புக் கொள்கின்றனர்.
8. தவணை செலுத்துதல் உரிய நாள் அட்டவணை பகுதி ஏ-யில் கண்டவாறு இருக்கும் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் / ஒப்பந்தப் புள்ளியின் சாராம்சம் கால அளவே என்பது புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.
9. இங்கு வாங்குவோருக்கு அந்த சொல்லப்பட்ட கடன் வழங்க பிஎப்எல் ஒப்புக் கொண்டதைக் கருதி கூட விண்ணப்பித்தவர் / கூட்டாக வாங்குவோர், பொறுப்புறுதியாளர், இந்த ஒப்பந்தத்தின் வரையீடுகள் மற்றும் நிபந்தனைகள், எல்லா வகைப்பாடுகள், அட்டவணைகள், வரைமொழிகள் ஆகியவற்றை வாங்கியோர் முறையாக செய்ய மற்றும் பின்பற்ற பிஎப்எல் ஒப்புக் கொண்டு உறுதி கூறி பொறுப்புறுதி தருகின்றனர் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் அசல், வட்டி கூடுதல் வட்டி, செலவினங்கள், உடைமையாக்கிய பின் பிஎப்எல்-ஆல் விற்பனையின் போது ஏற்படும் விற்பனை நஷ்டம், சேதங்கள், பழுது, பதிலி ஏற்படுத்துதல் அல்லது பிற நஷ்ட ஈடு மற்றும் பிற செலவுகள் ஆகியவற்றின் மூலம் ஏற்படும் (வாங்குவோரால் செலுத்தப்படாதது) பிஎப்எல் செலுத்த வேண்டியதாக உள்ள நிலுவை அல்லது எந்தத் தொகையும் எவ்வித சுணக்கம், தாமதம் அல்லது எதிர்ப்பு இன்றி செலுத்த / கட்ட ஒப்புக் கொள்கின்றனர்.

10. இந்த ஒப்பந்தத்தின் கீழ் அல்லது அதனுடன் கூட அல்லது தொடர்ச்சியாக அவன் / அவள் / அவற்களால் பிஎப்எல்-க்கு தரப்பட்ட எந்த மற்றும் எல்லாத் தகவல்களையும் எந்த நிதிக் கடன் நிறுவனம் அல்லது பிஎப்எல் சரியெனக் கருதும் எந்த நபரிடமும் வெளியிட பிஎப்எல்-க்கு உரிமை உண்டு என்பதை வாங்குவோர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர் / பொறுப்புறுதியளார் ஒப்புகை செய்து / ஒப்புக் கொள்கின்றனர் மற்றும் எந்த வகையிலும் அதனை வினவ அல்லது பிரச்சனை எழுப்புவதில்லை என வாங்குவோர் ஒப்புக் கொண்டு உறுதி கூறுகிறார்.

11. தவணை நிலுவை செலுத்துதல்

எந்த ஒரு வகை செலுத்துதலையும் அவன் / அவள் / அது பின்பற்ற வாங்குவோர் ஒப்புக் கொண்டு, கூறி மற்றும் உறுதி செய்துள்ளனர் மற்றும் அவ்வாறாக:-

(1) ஒப்பளிக்கப்பட்ட கடனுக்கெதிராக இங்கு சொல்லப்பட்டவாறு தவணைகள் உள்பட இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிஎப்எல்க்கு உரிய எல்லாத் தொகையையும் நிறைவு செய்யும் வகையில் பிஎப்எல்-க்குச் சாதகமாக பின் தேதியிட்ட காசோலைகளை வாங்குவோர் தந்துள்ளார் மற்றும் ஒவ்வொரு அத்தகைய முன் தேதியிட்ட காசோலைகளும் மாதாந்திர உரிய நாளைக் கொண்டதாக இருக்கும். இந்த ஒப்பந்தம் எழுதப்படும் போது அல்லது முன்னர் வாங்குவோரால் பின் தேதியிட்ட காசோலைகள் தரப்பட்டது என்ற உண்மை எப்படியிருந்தாலும் வாங்குவோரால் தரப்பட்ட பின் தேதியிட்ட காசோலைகள் அத்தகைய காசோலைகளின் முறையேயான நாளிலிருந்து செல்லத்தக்கது என்பதற்கும் மற்றும் எந்த ஒரு கால கட்டத்திலும் வாங்குவோரின் எந்த காரணம் காரணமாகவும் செல்லத்தக்கதல்ல என கோரிக்கை வைக்கக்கூடாது என்பதற்கும் இங்கு வாங்குவோர் நிபந்தனையின்றி மற்றும் மாற்ற முடியாதவாறு வரைமொழி கூறுகிறார். அத்தகைய பின் தேதியிட்ட காசோலைகள் வழங்கப் பெற்ற அந்த சொல்லப்பட்ட கணக்கில் போதுமான நிதி இருக்குமாறு அவன் / அவள் உறுதி செய்ய வேண்டும் என்பதற்கும் மற்றும் அத்தகைய பின் தேதியிட்ட காசோலைகள் வழங்கிய வாங்குவோரின் வங்கி கணக்கை வாங்குவோர் எப்போதும் முடக் கூடாது என்பதற்கும் மற்றும் / அல்லது காசாக்க அத்தகைய காசோலைகள் வழங்க வேண்டாம் என அறிவுரை கூறி பிஎப்எல்-க்கு எத்தகைய அறிவிப்பும் வழங்கக் கூடாது அல்லது அத்தகைய காசோலைகளை நிறுத்தி வைக்குமாறு வாங்கிக்கு அறிவிப்போ தரக்கூடாது அத்தகைய காசோலைகளை ஏற்கக் கூடாது எனக் கூறாமலிருப்பதற்கும் வாங்குவோர் மேலும் உத்தரவாதம் தருகிறார். இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிஎப்எல்-க்கு வாங்குவோரால் செலுத்தப்பட வேண்டிய தவணைக்கு பிஎப்எல்-க்கு சாதகமாக வாங்குவோரால் பின் தேதியிட்ட காசோலைகளின் அடிப்படையில் பிஎப்எல் ஆல் இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வசதி வழங்கப்பட்டுள்ளது எனப்தை வாங்குவோர் மேலும் உறுதி செய்கிறார். பின் தேதியிட்ட காசோலைகள் குறித்த விவரங்கள் அட்டவணை பகுதி இ(i)ல் முழுதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. ரூ.500/-க்கு மிகாமல் மாறுதல் கட்டணம் பிஎப்எல்-க்கு செலுத்திய பின் மட்டும் தான் பதிலி காசோலை / புதிய காசோலை வழங்க வாங்குவோருக்கு உரிமை உண்டு.

(2) இங்கு குறிப்பிடப்பட்டவாறு ஒப்பளிக்கப்பட்ட கடனுக்கெதிராக தவணை உள்பட இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிஎப்எல்-க்குரிய எல்லா தொகையினையும் நிறைவு செய்து பிஎப்எல்-க்கு சாதகமாக இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு நிலைப்பாடு வாங்குவோர் தந்துள்ளார். இந்த ஒப்பந்தம் எழுதப்படும் போது அல்லது அதற்கு முன்னர் இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு /பிற தீர்வு நிலைப்பாடு தரப்பட்டுள்ளது என்ற உண்மை எவ்வாறிருந்த போதிலும், அத்தகைய இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு நிலைப்பாடு உரிய நாளிலிருந்து கடைசியாக உரிய இஎம்ஐ அந்த மாதம் 30ம் தேதி வரை (செலுத்தப்பட்டது) செல்லத்தக்கதாகவும் மற்றும் எந்த ஒரு கால கட்டத்திலும் எந்த காரணம் குறித்து அவை செல்லத்தக்கதல்ல என வாங்குவோர் உரிமை கொண்டாட முடியாது என்பதை வாங்குவோர் இங்கு நிபந்தனையின்றி மற்றும் மாற்ற இயலாதவாறு வரைமொழி கூறுகிறார். எந்தக் கணக்கில் அத்தகைய இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / எந்த பிற மின்னணு அல்லது பிற தீர்வு நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதோ அதில் போதுமான நிதி இருப்பதை வாங்குவோர் உறுதி செய்ய வேண்டும் என்றும் மற்றும் அத்தகைய நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு நிலை வழங்கப்பட்டுள்ளதோ அந்த வாங்குவோரின் வங்கி கணக்கை எப்போதும் முடக் கூடாது மற்றும் / அல்லது காசாக்கப்பட அத்தகைய இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / எந்த பிற மின்னணு அல்லது பிற தீர்வு நிலை சமர்ப்பிக்கப்பட வேண்டாம் என பிஎப்எல்-க்கு எந்த அறிவிப்பு வெளியிடவோ அல்லது அத்தகைய இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு நிலை தருவதற்கு வங்கிக்கு நிறுத்த அறிவுரை கூறுவதோ கூடாது என்பதை வாங்குவோர் உறுதி செய்ய வேண்டும் மற்றும் அந்த ஆவணங்கள் / நிலைப்பாடை மதிக்கத் தவறுதல் கூடாது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிஎப்எல்-க்கும் வாங்குவோரால் செலுத்தப்பட வேண்டிய தவணைகளுக்கெதிராக வாங்குவோரால் பிஎப்எல்-க்குத் சாதகமாக வழங்கப்பட்ட இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறையின் அடிப்படையில் பிஎப்எல்-ஆல் இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வசதி வழங்கப்பட்டது என்பதை வாங்குவோர் மேலும் ஒப்புக் கொள்கிறார். இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறை மிக முழுதுமாக அட்டவணையில் பகுதி இ(ii) ல் விவரிக்கப்பட்டுள்ளது. அந்த இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறைகளை மாற்றவும் மற்றும் பிஎப்எல்-க்கு ரூ.500/-க்கு மிகாமல் மாறுதல் கட்டணம் செலுத்தி மட்டுமே புதியதாக இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறை வழங்கலாம்.

(3) நடவடிக்கையில் மதிப்பளிக்கப்படாமல் காசோலை இருப்பின் வகைப்பாடு 3(iv)ல் குறிப்பிட்டவாறு செல்லததற்கான கட்டணத்தைச் செலுத்தவும் மற்றும் அட்டவணை "பி"ல் முழுதுமாக விவரிக்கப்பட்டவாறு வகைப்பாடு 3(iv)ல் குறிப்பிடப்பட்ட உரிய நாளில் தவணை செலுத்த தவறியதற்கு தாமத கட்டணத்தைச் செலுத்தவும் வாங்குவோர் ஒப்புக் கொள்கிறார்.

(4) வாங்குவோரின் சம்பளக் கணக்கிலிருந்து மாதாந்திர தவணைகளை நேரடியாக எந்த கடன் திட்டத்தின் கீழ் பிடித்தம் செய்யப்படும் ஏற்பாடு இருந்தால் வாங்குவோரின் சம்பள கணக்கிலிருந்து பிஎப்எல்-ஆல் தவணை பிடித்தம் செய்ய, பிஎப்எல்-க்கு கட்டுவதில் தாமதம் / தவறுதல் ஏற்பட்டால் இந்த தாமத செலுத்தலுக்கான வட்டி பொருந்தும். எனவே, வாங்குவோரிடமிருந்து நிதி / ஆவணம் பிஎப்எல் ஆல் பெறும் நாள், தவணை பெறப்பட்ட நாளாகக் கருதப்படும் இருப்பினும்.

(5) எவ்வித தாமதம் / அல்லது தவறுதல் இன்றி உரிய நாளில் அல்லது அதற்கு முன்னர் மாதாந்திர தவணைக் கெதிராக ரொக்கமாக அல்லது கேட்பு வரைவோலை மூலம் செலுத்த வாடிக்கையாளர் உறுதிமொழி / உறுதிமொழி செய்தால் பின் தேதியிட்ட காசோலை / இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறை இன்றி வாங்குவோருக்கு தனது விருப்புரிமையில் பிஎப்எல் கடன் வழங்கலாம்.

(6) அந்த சொல்லப்பட்ட பிடிசி / இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறை வாங்குவோர் வங்கியால் திருப்பப்பட்டால் அல்லது தொழில் நுட்ப காரணம் / வங்கியாளர் தவறு / தீர்வு பிரச்சனை / போதுமான நிதி இல்லாமை அல்லது பிற எந்த காரணமாக இருந்தாலும் வாங்குவோர் வங்கிக்குச் செல்லாதிருந்தால், செலுத்தப்பட எவ்வித அறிவிப்பின்றி அத்தகைய பிடிசி / இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறை வாங்குவோர் வங்கிக்குச் செலுத்த அதனை வழங்க பிஎப்எல்-க்கு உரிமை உண்டு மற்றும் அது காசாக்கப்படாவிட்டால், ஒப்புக் கொள்ளப்பட்ட திருப்புதல் செலவு / வட்டி ஆகியவற்றுடன் பிஎப்எல்-ஆல் எவ்வித அறிவிப்பு / நினைவூட்டு இன்றி உடனடியாக வாங்குவோரின் உரிய கடன் கணக்கில் பிஎப்எல்-க்கு அந்த சொல்லப்பட்ட தொகையை முழுமையாக வாங்குவோர் செலுத்த / கட்ட வேண்டும். அந்த சொல்லப்பட்ட வசதி (பிடிசி / இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / எந்த பிற மின்னணு அல்லது பிற தீர்வு முறை) வாங்குவோரின் குறிப்பான கோரிக்கையின் பேரிலேயே பிஎப்எல்-ஆல் தரப்பட்டுள்ளது என்பது வாங்குவோரால் ஒப்புக் கொள்ளப்பட்டு மற்றும் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது மற்றும் உரிய மாத தவணைகளை உரிய காலத்தில் எவ்வித தாமதம் அல்லது தவறுதல் அல்லது பிஎப்எல்-ன் கேட்பு அறிவிப்பு இன்றி கட்டப்படுவதை வாங்குவோர் உறுதி செய்து / பார்த்துக் கொள்ள வேண்டியது வாங்குவோரின் தனிப்பொறுப்பாகும்.

(7) தவணை செலுத்துதலுக்காக பின் தேதியிட்ட காசோலைகள் மற்றும் / அல்லது மின்னணு தீர்வு நிலைப்பாடு எழுதிக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் / அல்லது பிற ஆவணங்களை சரியாக வாங்குவோர் மாற்றிட வேண்டும் மற்றும் அத்தகைய காசோலைகளை தாக்கல் செய்வதில் / பற்று அறிவுரை வழங்குவதில் எக்காரணம் கொண்டும் பிஎப்எல் எந்தக் கஷ்டம் / வசதிக் குறைவு / தடையை சந்தித்தால் அல்லது அதன் தனிப்பட்ட விருப்புரிமையில் எப்போதாவது பிஎப்எல் விரும்பினால் புதிய பின்தேதியிட்ட காசோலைகள், நிலைப்பாடு, ஒப்பந்தங்கள் மற்றும் / அல்லது பிற ஆவணங்களை புதிதாக பிஎப்எல்-ன் திருப்திக்காக வழங்கலாம்.

(8) வாடிக்கையாளர் மாதாந்திர இஎம்ஐ-யை பகுதியாக பிடிசி மற்றும் பகுதியாக இசிஎஸ்/ ஏடிஎம் / டிசிசி / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறை மூலம் செலுத்த / கட்ட, பிஎப்எல் தமது விருப்புரிமையில் அனுமதிக்கலாம்.

(9) அந்த நிதி கடன் திரும்பச் செலுத்தும் வசதி பின் தேதியிட்ட காசோலை, மின்னணு அல்லது பிற தீர்வு முறை ஆகியவை மேலே சொல்லப்பட்ட விருப்பு வழியாக செய்வது வாடிக்கையாளரின் குறிப்பான கோரிக்கையில் மட்டுமே வழங்கப்பட்டுளள்து. அத்தகை வசதி அல்லது எந்த பிற மின்னணு அல்லது பிற தீர்வு முறை வசதியை வாங்குவோர் வங்கி நிறுத்திக் கொண்டால், பிஎப்எல் ஏற்றுக் கொள்ளும் எந்த பிற செலுத்தல் முறையை மாற்றிக் கொள்ள வாங்குவோர் உறுதி எடுக்க வேண்டும் அல்லது தவணையை உரிய நாளில் அதற்கு முன்னர் தாமதம் அல்லது தவறுதல் அல்லது பிஎப்எல்-ன் கேட்பு அறிவிப்பு இன்றி ரொக்கமாக செலுத்த / கட்ட வேண்டும்.

10. மேலும், பிஎப்எல் தனது தனி விருப்புரிமையில் செலுத்துதலில் எந்த பிறதொருமுறைக்கு மாற அல்லது ஏற்க வாங்குவோரைக் கோரலாம் மற்றும் வாங்குவோர் எவ்வித தடைகூறு, தாமதம் அல்லது எதிர்ப்பு இன்றி அத்தகைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். விண்ணப்ப படிவத்தில் வாங்குவோரால் தேர்வு செய்யப்பட்டவாறு உள்ள செலுத்து முறை அல்லது எந்த செலுத்துமுறையின் கீழ் வாங்குவோரால் தரப்பட்ட நிலைப்பாடு ரத்து செய்ய முடியாது அல்லது பிஎப்எல்-ன் எழுத்து மூல முன் இசைவின்றி மாற்ற முடியாது. ஒரு வேளை வாங்குவோர் அத்தகையை முறையே பிஎப்எல்-ன் எழுத்து மூல முன் இசைவின்றி ரத்து செய்தால் அல்லது மாற்றினால் (அல்லது ரத்து செய்ய அல்லது மாற்றம் செய்ய முயன்றால்) வாங்குவோரின் அத்தகைய செயல் குற்ற எண்ணத்துடன் செய்யப்பட்டதாக கருதப்படும் மற்றும் அத்தகைய தவறுதல் நிகழுமானால் வாங்குவோருக்கெதிராக உரிய குற்ற மற்றும்அது போல் உரிமையியல் நடவடிக்கை எடுக்க பிஎப்எல்-க்கு உரிமை உண்டு.

12. எந்த பிரச்சனை அல்லது எத்தன்மையதான கருத்து வேறுபாடு, எந்த தவணையை அல்லது பிற தொகையை நிறுத்தி வைக்க அல்லது மாதம் செய்ய வாங்குவோர்க்கு எவ்வித உரிமையும் வழங்கவில்லை மற்றும் பின் தேதியிட்ட காசோலைகள் / இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறையை உரிய நாளில் வாங்குவோர் வங்கியில் தர பிஎப்எல்-க்கு உரிமையுண்டு.

13. தீர்வகம் அறிவுரைகள் அல்லது எந்த காரணமானாலும் பின் தேதியிட்ட காசோலைகள் / இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறையில் வாங்குவோர் வங்கியில் பிஎப்எல் தராவிட்டால், உரிய காலத்தில் கடனை திரும்பச் செலுத்தும் வாங்குவோரின் பொறுப்பு பாதிப்படையாது. எந்தக் காரணம் கொண்டும் தாமதம், விடல் அல்லது காசாக்குவதில் கவனமின்மை, சேதம் அல்லது பின் தேதியிட்ட காசோலைகள் தொலைந்தது / இசிஎஸ் நிலைப்பாடு / ஏடிஎம் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறையில் எந்தக் காரணம் கொண்டும் வங்கிக்கு (ஏற்கனவே தரப்பட்டது அல்லது வரையீடுகளின் படி பிஎப்எல்-க்கு வாங்குவோரால் தரப்பட வேண்டியது) உள்ளதில் ஏற்படுவதற்கு பிஎப்எல் எந்த விதத்திலும் பொறுப்பாகாது. எவ்வித தாமதம் அல்லது தவறுதல் அல்லது பிஎப்எல்-டமிருந்து கேட்பு அறிவிப்பு இன்றி உரிய மாதாந்திர தவணைகளை கட்டுவதை உறுதி / பார்த்துக் கொள்ள வேண்டியது வாங்குவோரின் தனிப்பொறுப்பாகும்.

14. பிஎப்எல்க்கு வாங்குவோரால் செலுத்தப்பட வேண்டிய எல்லா தொகையும் எவ்விதமான பிடித்தம் / ஒதுக்கீடு இன்றி செலுத்தப்படி வேண்டும். செலுத்துதலுக்கு வரவு / விடுவிப்பு உரிய தொகை பெறப்பட்ட பின்னரே செய்யப்படும்.

15. அட்டவணையில் பகுதி "டி" ல் குறிப்பிட்டவாறு விவரிக்கப்பட்டுள்ள எந்த நிலுவைத் தொகைக்கெதிராக அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய நேரத்தில் தனது விருப்புரிமையில் பிஎப்எல் நிர்ணயித்தவாறு முன் தவணை மற்றும் / அல்லது பிணைய வைப்பு / வாங்குவோர் முதலில் செலுத்திய ஆரம்ப செலுத்துதல் ஆகியவை சரி செய்யப்பட பிஎப்எல்-க்கு உரிமையுண்டு.

16. எந்த தாமதமான செலுத்துதலைப் பொறுத்து இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிஎப்எல்-ன் எல்லா பிற உரிமைகளுக்கும் பாதகமின்றி

(1) அட்டவணை "ஏ" & "பி" யில் விவரிக்கப்பட்ட தொகையை வசூலிக்க பிஎப்எல்-க்கு உரிமையுண்டு.

(2) வாங்குவோரின் சம்பளக் கணக்கிலிருந்து நேரடியாக தவணைப் பிடித்தம் செய்யும் எந்தக் கடன் திட்டத்தின் கீழ் நிதி உதவி ஏற்படுத்தப்பட்டிருந்தால், வாங்குவோரின் சம்பளக் கணக்கிலிருந்து அவன் / அவள் முதலாளி தவணை பிடித்தம் செய்திருந்தாலும் பிஎப்எல்-க்குக் கட்டுதலில் தாமதம் / தவறுதல் இருந்தால் இந்த தாமத செலுத்தல் வட்டி பொருந்தும்.

(3) வாங்குவோரிடமிருந்து பெறப்படும் எந்த தொகையும் முதலில் தாமத செலுத்தல் வட்டி அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் வாங்குவோர் மீது பிஎப்எல்-க்குள்ள எந்த பிற கோரிக்கைக்கு ஒதுக்கப்படும் மற்றும் அதன் பின்னர் தவணை செலுத்தியதில் நீண்ட நிலுவைக்கு ஒதுக்கப்படும்.

17. பிஎப்எல்-க்கு இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய எல்லா தொகையினையும் முழுதாக செலுத்தவில்லையென்றால் இந்த ஒப்பந்தத்தை முடிக்க வாங்குவோருக்கு உரிமையில்லை.

18. இந்த ஒப்பந்தத்தின் கீழ் எங்கு என்ன சொல்லியிருந்த போதிலும், தவணைகள், ஒப்பளிக்கப்பட்ட கடனின் நிலுவைத் தொகை, வட்டி, கூடுதல் வட்டி, கட்டணம், செலவினம், முத்திரைக் கட்டணம் மற்றும் இங்கு வாங்குவோரால் பிஎப்எல்க்குச் செலுத்த வேண்டிய எல்லா பிற தொகையும் மற்றும் அல்லது ஒப்பளிக்கப்பட்ட கடன் தொடர்பானது (இனி வாங்குவோரின் (களின்) நிலுவை என குறிக்கப்பெறும்) வாங்குவோரால் பிஎப்எல்-க்குச் செலுத்தப்பட வேண்டும். பிஎப்எல் எந்த நேரத்திலும் தனது விருப்புரிமையில் மற்றும் எந்த காரணம் கூறாது வாங்குவோரை அழைத்து வாங்குவோரின் நிலுவையினை செலுத்தக் கோரலாம் மற்றும் அதன் பின்னர் அவ்விதம் கூறப்பட்ட 7 நாட்களுக்குள் பிஎப்எல்-க்கு வாங்குவோர் செலுத்த வேண்டிய முழுமையும் எவ்வித தடைகூறு, தாமதம், சுணக்கம் அல்லது எதிர்ப்பு அல்லது பிஎப்எல்-டமிருந்து கேட்பு அறிவிப்பு இன்றிச் செலுத்த வேண்டும்.

19. விற்பனையாளர் / தயாரிப்பாளர் / விற்பவர் ஆகியோரிடமிருந்து பொருளைப் பெறுதல் / ஏற்றுக் கொள்ளுதல் அவ்வாறாக வாங்குபவரின் தனிப்பட்ட பொறுப்பாகும் மற்றும் அந்தப் பொருள் வழங்குவதில் தாமதம் அல்லது வழங்காதிருத்தல் மற்றும் அல்லது தரம், நிலைமை, தகுதி செயல் திறன், பொருந்துகை உடல் நிறம் அல்லது அப்பொருள் பிற எவ்வாறிருந்தாலும் பிஎப்எல் பொறுப்பாக / ஏற்றுக் கொள்ளாது.

20. பொருளின் வாங்கும் விலை கூடுதல் / குறைவு காரணமாக ஒப்பளிக்கப்பட்ட கடனின் அசல் தொகையில் வாங்குவோர் கூடுதல் / குறைவு செய்ய உரிமையில்லை.

21. இந்த ஒப்பந்தக் காலத்திற்குள் வாங்குவோர்

(1) ஒப்பந்தத்தின் கீழ் எல்லா பொறுப்புகளையும் மற்றும் வரைமொழிகளையும் பின்பற்றி மற்றும் செயலாற்ற வேண்டும்.

(2) தாமதம், தவறுதல் ஏதும் இன்றி உரிய காலததில் பிஎப்எல்-க்கு தவணையை செலுத்த உறுதி செய்ய வேண்டும் மற்றும் தவணை செலுத்துதற்கு எதிராக வழங்கப்பட்ட காசோலைகள் / இசிஎஸ் / பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறைகள் காலத்தில் தாக்கல் செய்து ஏற்கப்பட வேண்டும். தவைணக்கெதிராக அவரது வங்கி கணக்கிலிருந்து பற்று வைக்கப்பட்டதை சரி பார்த்து உறுதி செய்வது வாங்குவோரின் கடமையாகும். ஒரு வேளை அவ்விதம் அவரது கணக்கில் பற்று வைக்கப்படாவிட்டால், அத்தகைய தவணை தேதியிலிருந்து 3 நாட்களுக்குள் பஜாஜ் பினான்ஸ் லிமிடெட், ஆகுர்டி, மும்பை, பூனா ரோடு, பூனா 411 035 என்ற முகவரிக்கு இது குறித்து பிஎப்எல்-க்கு எழுத்து மூலம் தகவல் தெரிவிப்பது வாங்குவோரின் கடமையாகும் மற்றும் அந்த சொல்லப்பட் செலுத்தப்படாததை தாமதம் அல்லது பிஎப்எல்-ன் கேட்பு அறிவிப்பு ஏதும் இன்றி உரிய தவணை (களை) / இஎம்ஐ ரொக்கமாக செலுத்துவதை / கட்டுவதை வாங்குவோர் செலுத்த வேண்டும். உரிய நாளுக்கு முன் வேலை நாளில் கணக்கில் போதுமான நிதியை வைத்திருக்கவும் மற்றும் பிஎப்எல்-க்கு தவணைச் செலுத்துதல் சரி செய்யப்படும் / செலுத்தப்படும் வரை இருப்புத் தொகையைப் பராமரிக்க வேண்டும்.

(3) பொருளை நல்ல முறையில் மற்றும் பணி செய்யக் கூடிய நிலையில் பராமரிக்க வேண்டும். சட்டபூர்வமாக சரியானதென்று மற்றும் இருக்கத் தேவையான எல்லா உரிமங்கள், வரிகள், காப்பீடு, அனுமதி, ஒப்புதல், இசைவு மற்றும் தீர்வு இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

(4) வாங்குவோரின் முகவரியில் எந்த மாறுதல் / மாறுதல்கள் இருப்பின் மற்றும் தொலைபேசி / கைப்பேசி எண்கள் உள்பட தொடர்பு கொள்ளும் விபரங்களை பதிவு தபால் மூலம் பிஎப்எல்-ன் தலைமை / பதிவு அலுவலகம் உள்ள பஜாஜ் பினான்ஸ் லிமிடெட், ஆகுர்டி, மும்பை - பூனா ரோடு, பூனே 411 035 என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும்.

(5) வாங்குவோரின் வேலை, வணிகம், அல்லது தொழிலில் மாறுதல் இருப்பின் பதிவுத் தபால் மூலம் பிஎப்எல்-ன் தலைமை / பதிவு அலுவலகம் உள்ள பஜாஜ் பினான்ஸ் லிமிடெட், ஆகுர்டி, மும்பை - பூனே ரோடு, பூனே 411 035 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். வாங்குவோர் சுய வேலை செய்பவராயிருப்பின், பிஎப்எல்-ஆல் அவருக்கு அறிவிக்கப்பட்டவாறு முறையான அடிப்படையில் தமது வணிகத்தின் நிதி நிலைமை குறித்து பிஎப்எல்-க்கு தெரிவிக்க வாங்குவோர் இங்கு உறுதி கூறுகிறார். வாங்குவோர் தனி நபர் நிறுவனமாயிருப்பின் பிஎப்எல் கோரப்பட்ட அத்தகைய தகவல்கள் மற்றும் / அல்லது ஆவணங்களை வாங்குவோர் பிஎப்எல்-க்கு வழங்க வேண்டும்.

(6) வாங்குவோர் அல்லது அதன் முகவர்களால் பொருள் பயன்படுத்துவதன் தொடர்பாக மற்றும் / அல்லது எழும் எந்த சட்ட நடவடிக்கை அல்லது வழக்கு, இழப்பு அல்லது மூன்றாம் நபர்களின் கோரிக்கைக்கு எதிராக பிஎப்எல்-க்கு ஈட்டுறுதி செய்ய வேண்டும்.

(7) இந்த ஒப்பந்தம் தொடரபான எந்த காரணங்களுக்கான அல்லது ஒப்பந்தம் தொடர்பான எந்த வரிகள் உள்ளிட்ட இந்த ஒப்பந்தத்தின் கீழ் வரும் பொருள் அல்லது ஒப்பளிக்கப்பட்ட கடன் மற்றும் வரையீடுகளை நிலை நிறுத்தலுக்கான எல்லா செலவினங்களும் பிஎப்எல்-க்குச் செலுத்த / ஈடு செய்யப்பட வேண்டும்.

(8) சட்ட பூர்வ மற்ற அல்லது சமூக விரோத காரணங்களுக்கு / நடவடிக்கைகளுக்கு பொருளைப் பயன்படுத்தக்கூடாது.

(9) பிஎப்எல்-ன் எழுத்து மூல இசைவின்றி மாநிலத்திலிருந்து (பொருள் வாகனமாக இருந்தால் பதிவு செய்யப்பட் மாநிலத்திலிருந்து) பொருளை எடுத்துச் செல்லக்கூடாது.

(10) பொருளை வைத்துக் கொள்ள அல்லது சட்டபூர்வ நடைமுறையில் கொள்ள, அல்லது எந்த பொது அதிகார அமைப்பால் அல்லது துறையால் செயலாற்ற எடுத்துக் கொள்ளுமாறு செய்யவோ அல்லது எந்த செயலை அல்லது பொருளை பாதிக்குமாறு செய்யக்கூடாது.

(11) காப்பீட்டு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படாத எந்த காரணத்திற்கும் பொருளின் பயன்பாட்டினை பயன்படுத்தவோ அல்லது அனுமதிக்கவோ கூடாது காப்பீட்டினை செல்லாததாக்கும் வகையில் எந்த செயலையும் அல்லது பொருளையும் செய்ய அல்லது செய்து முடிக்க அனுமதிக்கவோ கூடாது.

(12) இங்குள்ள பொருள் குறித்த மற்றும் நடவடிக்கை தொடர்பான தற்போதுள்ள அதே போல் எதிர் காலத்தில் ஏற்படும் எல்லா வரிகள், வீதங்கள், கட்டணங்கள், தீர்வைகள் மற்றும் விதிப்புகள் மற்றும் கடமைகளை செலுத்தி மற்றும் ஏற்க வேண்டும்.

(13) தேவையான காலங்களில் பொருளின் நிலைமை மற்றும் அமைப்பு குறித்தும் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை பார்வையிட, பார்க்க மற்றும் பரிசீலிக்க பிஎப்எல் மற்றும் அதன் பிரதிநிதிகளை அனுமதிக்க வேண்டும் மற்றும் / அல்லது பிஎப்எல்-ஆல் சொல்லப்பட்ட இடத்தில் பிஎப்எல் அல்லது அதன் பிரதிநிதி பார்வையிட அதனை கொணர வேண்டும்.

(14) ஒப்பளிக்கப்பட்ட கடனை திருப்பிச் செலுத்துதல் மற்றும் பொருளை முறையாக பெற மற்றும் சரியாகக் கைப்பற்ற அவ்வப்போது பிஎப்எல் கோரும் எல்லா அத்தகைய செயல்களை செய்ய வேண்டும் மற்றும் எல்லா அத்தகைய ஆவணங்கள் எழுதித் தர வேண்டும்.

(15) பொருளை ஈடு செய்யவோ அல்லது ஈடு செய்ய முயலவோ, அல்லது விற்கவோ அல்லது விற்க முயலவோ, வில்லங்கம் ஏற்படுத்தவோ மாற்றவோ அல்லது பொருளின் உடைமையை பகுதி விடுவிக்கவோ அல்லது பொருளை எந்த முறையில் ஏற்பாடு செய்யவோ அல்லது அந்த பொருளின் மீது பிஎப்எல்-ன் பிணையம் பாதிக்கும் செயல் அல்லது விடுதல், எதுவும் செய்தல் அல்லது விடுதல் செய்யக்கூடாது.

(16) உரிய நாளில் தாண்டி தவணை அல்லது நிலுவை செலுத்துதலில் எந்த தவறும் அல்லது தாமதமும் கூடாது.

(17) இங்கு ஒப்புக் கொண்ட சமன் செய்த தவணை செலுத்துதலில் வாங்குவோரால் தவறுதல் செய்யப்பட்டால் பொருளை உடைமையாக்குவதில் பிஎப்எல்-ஐ தடுக்கவோ அல்லது இடையூறு செய்யவோ கூடாது.

(18) விண்ணப்ப படிவம் சமர்ப்பிக்கப்படும் போது பொருளின் (களின்) முழு விபரங்களும் (எஞ்சின் எண் / உடன் எண் / வரிசை எண் / பதிவு எண் மற்றும் பிற விண்ணப்பத்தில் கோரியவாறு) இல்லையெனில் பொருள் (களின்) அத்தகைய எல்லா விபரங்களையும் பிஎப்எல் குறிப்பிட்ட படிவ அமைப்பில் பொருளை பெற்றுக் கொண்ட 5 நாட்களுக்குள் அல்லது உரிய அமைப்பிடமிருந்து அத்தகைய விபரங்கள் (வாகனத்தின் பதிவு எண் போன்ற அத்தகைய) பதிவு சான்று வரி சான்று, காப்பீடு திட்டம் ஆகியவற்றின் நகல் உள்பட பிஎப்எல்-க்கு வழங்க வேண்டும்.

(19) சாலை போக்குவரத்து அமைப்பிடம் அந்த சொல்லப்பட்ட பொருளைப் பதிவு செய்து மற்றும் சாலை போக்குவரத்து அமைப்பு / பஜாஜ் ஆட்டோ லிமிடெட் அமைப்பின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரிடமிருந்து பொருளின் அசல் பதிவு சான்றினைப் பெற்று மற்றும் அதன் நகலினை உடனடியாக பிஎப்எல்-க்கு சமர்ப்பிக்க வேண்டு. விற்பனை இன்வாய்ஸ் நாளிலிருந்து 10 நாட்களுக்குள், உரிய பதிவு அமைப்பிடம் அத்தகைய பொருளைப் பதிவு செய்து, பிஎப்எல்-க்கு பதிவுச் சான்றின் சான்றிடப்பட்ட நகலை வாங்குவோர் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய பொருட்கள் தனியாக பிஎப்எல்-க்கு சாதகமாக பற்றுப் பொறுப்பில் உள்ளது / ஈடு செய்யப்பட உள்ளது என்ற உண்மையை சம்பந்தப்பட்ட அமைப்பிடம் தெளிவாக விளக்கி குறிப்பிட்டு அந்தப் பொருளை பதிவு செய்ய வேண்டும். எங்கு தேவைப்படுகிறதோ / பொருந்துகிறதோ (வணிக வாகனங்கள் / வாடகைக்கான வாகனங்கள் என அத்தகைய) அந்தப் பொருளை அந்த மாநிலத்தில் / இடையே ஓட்ட / பயன்படுத்த அல்லது அத்தகைய பொருள் எங்கு பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்தப் பகுதி சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பிடம் தேவையான எல்லா அனுமதிகள் / உரிமம் / தகுதிச் சான்றினை வாங்குவோர் பெற்றிட வேண்டும். பிஎப்எல்-ன் பதிவு பெற்ற அலுவலகமான பஜாஜ் பினான்ஸ் லிமிடெம் ஆகுர்டி மும்பை - பூனே ரோடு, பூனே 411 035 மகாராஷ்டிரா மாநிலம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அப்பொருள் குறித்த முழு விபரங்கள் (பதிவு எண், பதிவு சான்று நகல் உள்பட) வைத்துள்ள வரை / தரப்படும் வரை வாங்குவோருக்கு வழங்கப்படமாட்டாது. தடையின்மைச் சான்றிதழ் (படிவம் 35) பிஎப்எல்-டமிருந்து வழங்கப்படுவது தற்காலிகமானது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் முன் கூட்டியே முடித்தல் / சாதாரண முடித்தல் வசதி துய்க்கப்படும் போது அந்த பிஎப்எல் உடன் உள்ள வசதி முன் கூட்டிய முடித்தல் / சாதாரண முடித்தலிலிருந்து 7 நாட்களுக்குள், அந்தப் பொருள் பதிவு சான்று மற்றும் / அல்லது உரிய பதிவு அமைப்பின் பதிவுகளிலிருந்து பிஎப்எல்-ன் பெயரில் உள்ள பற்றுப் பொறுப்பு / ஈடு நீக்கி அவ்வாறாக தேவையான மேலெழுத்து / ஈடு நீக்கி) சான்றிடப்பட்ட பதிவு நகலை பிஎப்எல்-ன் பதிவு பெற்ற அலுவலகமான பஜாஜ் பினான்ஸ் லிமிடெம் ஆகுர்டி மும்பை - பூனே ரோடு, பூனே 411 035 மகாராஷ்டிரா மாநிலம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(20) இந்த ஒப்பந்த கால கட்டத்தில் தகுதி சான்று, மற்றும் பொருள் காப்பீடு (முழு காப்பு) புதுப்பித்தலை உறுதி செய்ய வேண்டும்.

**22.** பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டு விண்ணப்பதாரர் பொறுப்புறுதிகள்

I இந்த ஒப்பந்தத்தின் கீழ் அட்டவணைப் படி பிஎப்எல்க்கெதிராக பொறுப்பு வாங்குவோரால் செய்யப்படும் செலுத்தல் மற்றும் கடமை.

II இந்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டவாறு தவறுதல் நிகழ்வு எதுவும் (வகைப்பாடு 24) நிகழ்ந்தால், எவ்வித சுணக்கம் அல்லது எதிர்ப்பு அல்லது எத்தன்மையானதுமான ஆட்சேபனை ஏதுமின்றி, பிஎப்எல் ஆல் வழங்கப்பட்ட கடனுக்கெதிராக உள்ள நிலுவைத் தொகை வட்டியுடன் மற்றும் வாங்குவோரால் செலுத்தப்படி வேண்டிய அல்லது பிஎப்எல் செலவு செய்த எல்லா பிற தொகை மற்றும் விதிப்புகள் ஆகியவற்றை செலுத்த வேண்டும்.

III வாங்குவோரால் இந்த ஒப்பந்தத்தின் கீழ் முறையாக செயலாற்ற எல்லா வரையீடுகளும் மற்றும் நிபந்தனைகளும் தரப்பட்டுள்ளன.

(1) பொறுப்புறுதி உள்ளடக்கிய தவறுதல் நிகழ்வு குறித்து பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பம் செய்வோர் குறிப்பிட்ட விலாசம் படிவத்தில் செய்யப்பட்டது (இந்த ஒப்பந்தத்தின் அட்டவணையில் முழுதுமாக சொல்லப்பட்டது) தவிர பிஎப்எல்-ன் எழுத்து பூர்வ கேட்புடன் எந்த ஆதாரத்தையும் அவன் / அவள் / அவர்கள் கோரமாட்டார்கள் என்பதற்கு பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் இங்கு குறிப்பை ஒப்புக் கொள்கின்றனர். உரிய தொகை குறிப்பிட்டு பிஎப்எல்-ன் அதிகாரியால் சான்று / கடிதம் எழுதி ஒப்பமிடப்பட்டு எந்த ஒரு காலத்திலும் பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தோர்க்கு சமர்ப்பிக்கப்பட்டது பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவருக்கெதிரான இறுதி ஆதாரமாகும்.

(2) எவ்வித தடைகள் அல்லது நிபந்தனையின்றி மற்றும் வாங்குவோர் அல்லது எந்த பிற நபராலும் எந்த ஆட்சேபனை இருப்பினும் பிஎப்எல்-ன் முதல் கேட்புக்கே பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் செலுத்த வேண்டும். இந்த பொறுப்புறுதியின் கோரிக்கையை நியாயப்படுத்த பிஎப்எல்-ஐ பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தோர் கோரக்கூடாது மற்றும் இங்கு செய்யப்பட்ட எந்த செலுத்தல்களைப் பொறுத்தும் பிஎப்எல்-க்கு எதிராக பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தோர் வழி தேடி முடியாது.

(3) இந்த ஒப்பந்தத்தின் கீழ் வாங்குவோரின் எல்லா பொறுப்புகளும் முழுதுமாக மற்றும் இறுதியாக தீர்க்கப்படும் வரை மற்றும் வாங்குவோருக்கு தடையின்மைச் சான்றிதழ் அல்லது நிலுவையில்லை என்ற சான்றிதழ் பிஎப்எல் வழங்கும் வரை இந்த பொறுப்புறுதி தொடர்ச்சியான பொறுப்புறுதியாக இருக்கும் என பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் இங்கு குறிப்பாக ஒப்புக் கொள்கிறார். பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்கியவர் / கூட்டாக விண்ணபித்தவர் பொறுப்பு கூட்டானது / வாங்குவோருடன் கூட்டானது மற்றும் தனியானது.

(4) அவன் / அவள் / அவர்கள் பொறுப்பு பொறுப்புறுதியின் செயல்படுத்தும் காரணங்களுக்காக வாங்குவோர் உடன் / கூட்டாக உள்ளது எனக் குறிப்பாக பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பதாரர் ஒப்புக் கொள்கிறார். இந்த பொறுப்புறுதியன் கீழுள்ள வகைப்பாடுகளின் படி வாங்குவோர் பிஎப்எல்-க்கு செலுத்த வேண்டிய எல்லா நிலுவைகளுக்காக பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் முதன்மைக் கடனாளராக கூட்டாகவும் தனியாகவும் வாங்குவோருடன் இருப்பார்.

(5) இந்த ஒப்பந்தத்தின் கீழ் வாங்குவோருக்கு உள்ள எல்லா பொறுப்புகளும் முழுதுமாக மற்றும் இறுதியாக தீர்க்கப்படும் வரை மற்றும் தடையின்மை சான்றிதழ் பிஎப்எல் ஆல் வாங்குவோருக்கு தரப்படும் வரை எந்த சூழ்நிலையிலும் இந்த பொறுப்புறுதியின் கீழ் பிஎப்எல்-க்கு செய்ய வேண்டிய அவர்களது பொறுப்பிலிருந்து விடுவிப்பு இல்லை என்பதை இங்கு குறிப்பாக பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் ஒப்புக் கொள்கிறார்.

(6) வாங்குவோர் அழைக்கப்பட்டது அல்லது எதிராக நடவடிக்கை மேற்கொண்டது எவ்வாறாயினும் பிஎப்எல்-ஆல் கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்ட உடனேயே செலுத்த / தீர்வு செய்யும் வாங்குவோரின் பொறுப்பு எழுகிறது என்ற பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவரின் கடமையை பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் ஒப்புக் கொள்கிறார்.

(7) இந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள எந்த ஒரு கடமையினையும் நிறைவேற்ற வாங்குவோர் தவறுதல் தொடர்பான அல்லது அதன் கீழ் அல்லது அதனின்று எழும் எல்லா சேதம், இழப்பு, செலவுகள், விதிப்புகள் மற்றும் செலவினங்கள் (வழக்கறிஞர் கட்டணம் உட்பட வரையறையற்று) எதிராக பிஎப்எல்-க்கு ஈட்டுறுதி செய்யப்பட வேண்டும் என்பதை இங்கு பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தோர் ஒப்புக் கொள்கின்றனர்.

(8) இந்த கடன் ஒப்பந்தத்தின் கீழ் அது அதன் பிணையத்தை நிலை நிறுத்துகிறதோ அல்லது இல்லையோ அல்லது வாங்குவோருக்கு அல்லது பிற எந்த நபர் அல்லது நிறுவனத்திற்கெதிராக முன்னர், ஒரே நேரத்தில் அல்லது எந்த நடவடிக்கைகக்குப் (சட்டபூர்வ அல்லது பிறவாறு) பின்னர் தாக்கல் செய்திருந்தாலும் பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவருக்கு எதிராக நடவடிக்கை (சட்டபூர்வ அல்லது பிறவாறு) எடுத்திருந்தாலும் பிஎப்எல் இந்த பொறுப்புறுதியை அமுலாக்க உரிமை உண்டு என்பதை பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் இங்கு ஒப்புகை செய்து மற்றும் ஒப்புக் கொள்கின்றனர்.

(9) பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவரின் பொறுப்புறுதி இந்திய சட்டங்களின்படி பொருள் கொள்ளப்படும்.

(10) பிஎப்எல் சரி எனக் கருதும் எந்த கடன் தகவல் கழகம் அல்லது பிற எந்த நபர் / நிறுவனம் ஆகியவற்றுடன் இந்த பொறுப்புறுதியின் தொடாச்சியாக அல்லது அதனுடன் கூட அல்லது அதன் கீழ் பிஎப்எல்-டன் அவன் / அவர்களால் தரப்பட்ட எந்த மற்றும் எல்லா தகவல்களையும் பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் பெயர்(களை) வெளியிட / பகிர்ந்து கொள்ள பிஎப்எல்-க்கு உரிமையுண்டு என்பதை பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவரால் ஒப்புக் கொள்ளப்படுகிறது மற்றுத் அதனை எவ்வகையிலும் பிரச்சனை / வினா எழுப்பவில்லை என்பதை இங்கு பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் இங்கு ஒப்புக் கொண்டு உறுதி மொழி கூறுகின்றனர். வாங்குவோரின் உரிய பொறுப்பினை பிஎப்எல்-க்கு பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவரிடமிருந்து / உடைய பொறுப்பினை பிஎப்எல் சரியெனக் கருதும் பிஎப்எல்-க்கு பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் ஆகியோரால் / ஆகியோரிடமிருந்து உள்ள பொறுப்பினை வாங்குவோரின் உரிய பொறுப்பாக எந்த கடன் வசதிக் கழகம் அல்லது பிற எந்த நபர்கள் / நிறுவனத்திற்கு பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தோர் பெயரை பிஎப்எல் வெளியிட / பகிர்ந்து கொள்ள உரிமை உண்டு என்பதை பிஎப்எல்-க்கு பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவரால் ஒப்புகை செய்ய ஒப்புக் கொள்ளப்படுகிறது. எந்த வகையிலும் எவ்வாறிருந்தாலும் பிரச்சனை / வினா எழுப்பவில்லை இங்கு பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் இங்கு ஒப்புக் கொண்டு மற்றும் உறுதிமொழி தருகின்றனர். எவ்வித தாமதம் அல்லது தவறுதலின்றி எல்லா தவணைகளையும் பிஎப்எல்-க்கு வாங்குவோர் செலுத்துவதை உறுதி செய்வது பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தோரின் பொறுப்பு / கடமை என்பது மேலும் இங்கு ஒப்புக் கொள்ளப்படுகிறது. இதற்காக வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவருக்கு பிஎப்எல் எவ்வித கேட்பு அறிவிப்பு (வாய்மொழி அல்லது எழுத்து மூலம் அனுப்ப / சார்வு செய்ய வேண்டியதில்லை மற்றும் பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் இதற்கு ஒப்புக் கொள்கிறார்.

(11) இந்த கடன் ஒப்பந்தத்தின் கீழ் வகைப்பாடு செய்யப்பட்டுள்ள வகைப்பாடு 26ன் கீழ் உள்ள இசைவுத் தீர்வு பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தோரை முழுதுமாக கட்டுப்படுத்தும் என்பதையும் மற்றும் இசைவுத் தீர்வாளரால் வழங்கப்பட்ட தீர்வும் பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தோரைக் கட்டுப்படுத்தும்.

(12) இந்த ஒப்பந்த நாளிலிருந்து இந்த பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் பொறுப்புறுதி (இந்த ஒப்பந்தத்தின் கீழ் அட்டவணையில் முழுதுமாக விவரிக்கப்பட்டது) அமுலுக்கு வரும் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிஎப்எல்-க்கு வாங்குவோரால் மற்றும் / அல்லது பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவரால் இங்கு பிஎப்எல்-ன் முழுதும் மற்றும் இறுதியாக திருப்படையுறும் வகையில் கடன், அதன் மீதான வட்டி மற்றும் பிற எல்லா தீர்வைகள் மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைகள் முழுதும் செலுத்துபட்டால் மட்டுமே முடிவுக்கு வரும்.

(13) இந்த பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவரின் பொறுப்புறுதி பிஎப்எல்-க்கு தனிப்பட்டதல்ல மற்றும் வாங்குவோரின் முதன்மைப் பொறுப்புடன் பிஎப்எல்-ஆல் எந்த நபருக்கும் (முழுதுமாக அல்லது பிணையமாக) முழுதும் அல்லது பகுதியாக ஒதுக்கீடு / மாறுதல் செய்யப்படலாம்.

(14) இந்த ஒப்பந்தத்தைப் பொறுத்து பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவருக்கு தர வேண்டிய அறிவிப்பு பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவருக்கு சார்வு செய்யப்பட்டால் அல்லது சாதாரண தபாலில் அனுப்பினால் அலலது பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் முகவரியாக ஒப்பந்த அட்டவணையில் சொல்லப்பட்ட முகவரியில் பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தோர் இருக்கும் அல்லது கடைசியாக தெரிந்த வணிக முகவரி அல்லது தனியார் முகவரியில் தரப்பட்டால் சரியாக தரப்பட்டதாக கருதப்படும். சாதாரண தபாலில் அனுப்பப்பட்ட எந்த அத்தகைய அறிவிப்பு அது தபாலில் போடப்பட்டதிலிருந்து 48 மணி நேரத்திற்குள் பொறுப்புறுதியாளரால் பெறப்பட்டதாக கருதப்படும் மற்றும் பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் இதற்கு ஒப்புக் கொள்கின்றனர்.

**23.** காப்பீடு

(1) அவ்வப்போது காப்பீடு புதுப்பித்தல் உள்பட பொருளை காப்பீடு செய்வதற்கு (முழு அளவில்) வாங்குவோரே முழுதும் பொறுப்பாவார் மற்றும் எவ்வித தாமதமுமின்றி கடன் நடப்பு காலத்தில் அத்தகைய நடப்புகள் மற்றும் எல்லா இடர்பாடுகளுக்கும் ஒட்டு மொத்தமாக காப்பீடு செய்யவும் காப்பீடு செய்யப்பட்டு வைத்திருக்கவும் வேண்டும். எந்த சூழ்நிலையிலும் பொருளின் காப்பீட்டிற்கோ அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொருளுக்கு ஏற்படும் விபத்து காரணமாக எழக்கூடிய மூன்றாம் நபர் கோரிக்கைக்கும் பிஎப்எல் பொறுப்பாகாது. ஒப்பந்தக் காலத்திற்கு பிஎப்எல் வழியாக கூட்டுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பிரிமீயம் செலுத்தும் வசதியை வாங்குவோர் விரும்பிய போது, பிஎப்எல்-க்கு வாங்குவோர் பிரிமீயம் செலுத்தினால் மட்டுமே அந்த வசதியை பிஎப்எல் ஏற்படுத்திக் கொடுக்கும். அதன் பகுதியாக எந்த விடுதல் / தவறுக்காக பிஎப்எல் உறுதியோ அல்லது பொறுப்போ அல்லது காரணமோ ஏற்றுக் கொள்ளாது அல்லது பொருளின் விபத்து காரணமாக எழும் எந்த மூன்றாம் நபர் கோரிக்கைக்கும் பொறுப்பேற்காது.

(2) வாங்குவோர் இறந்து போனால், நியமனதாரர் / சட்ட பூர்வ வாரிசுதாரர்கள் தாமதம், சுணக்கம் அல்லது எதிர்ப்பின்றி தேவையான ஒப்பமிடப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கவும் பிஎப்எல் முழுமையான மற்றும் இறுதி திருப்தியாக கடன் ஒப்பந்தத்தின் கீழ் உள்ள மீத நிலுவையை பிஎப்எல்க்கு காப்பீடு கம்பெனி செலுத்த அனுமதி / தீர்வு தரவும் மற்றும் ஏதேனுமிருப்பின் மீதமுள்ள நஷ்ட ஈட்டினை பெறவும் ஒப்புக் கொள்கின்றனர். மேலும் பிஎப்எல் நேரடியாக அந்த சொல்லப்பட்ட தொகை பெற பிஎப்எல் அல்லது காப்பீடு கம்பெனிக்கு நியமனதாரர் எந்த ஆட்சேபணையும் எழுப்பக்கூடாது. பிஎப்எல்க்கு இந்த ஊர்தி கடன் ஒப்பந்தத்தின் தொகை குறைபாடு இருந்தால், அது, தாமதம், சுணக்கம் அல்லது எதிர்ப்பின்றி நியமனதாரர் / சட்டபூர்வ வாரிசுகளால் சரி செய்யப்பட வேண்டும்.

(3) பொருளுக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டால் அல்லது தொலைந்து போதல், திருட்டுப் போதல் அல்லது அழிந்து போதல் ஏற்பட்டால், காப்பீடு அல்லது பிறவற்றால் காப்பீடு காரணமாக எந்த இடர் ஏற்பட்டால் மற்றும் வாங்குவோரின் கவனக்குறைவு அல்லது தவறான செயல், அல்லது பிறவாறு ஏற்பட்டால், வாங்குவோர் பிஎப்எல்-ன் பதிவு பெற்ற அலுவலகம் உள்ள பஜாஜ் பினான்ஸ் லிமிடெட், ஆகுர்டி, மும்பை, பூனா ரோடு, பூனா 411 035, மகாராஷ்டிரா மாநிலம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்க / தெரிவிக்க வேண்டும் மற்றும் அத்தகைய சேதம், இழப்பு, திருட்டு அல்லது அழிப்பு குறித்து அதன் நிகழ்விலிருந்து 48 மணி நேரத்திற்குள் காப்பீடு கம்பெனிக்குத் தெரிவிக்க வேண்டும். அத்தகைய சேதம், இழப்பு, திருட்டு அல்லது அழிப்பு குறித்து காவல் துறையிடம் உடன் வாங்குவோர் புகார் / எப்ஐஆர் தாக்கல் செய்ய வேண்டும் மற்றும் பிற உரிய அமைப்புகளிடமும் நிகழ்வு நடந்து 48 மணி நேரத்திற்குள் சட்டப்படி புகார் செய்ய வேண்டும்.

(4) அந்தப் பொருள் தொலைந்தால், திருடப்பட்டால், சேதப்படுத்தப்பட்டால் அல்லது அழிக்கப்பட்டால், எதிர்காலத்தில் பிறவாறு திரும்பச் செலுத்தக் கூடிய பகுதி உள்பட ஒப்பளிக்கப்பட்ட கடனின் நிலுவை முழுவதும் மற்றும் இதர நிலுவை செலுத்துவதற்கெதிராக எந்த காப்பீட்டுக் கம்பெனியின் வசூலிலிருந்து ஒதுக்கீடு செய்ய பிஎப்எல்-க்கு முதல் உரிமையும் / பற்றுப் பொறுப்பும் உள்ளது. அத்தகைய ஒதுக்கீட்டுக்கு பின்னர், கூடுதல் ஏதும் விடப்பட்டிருப்பின் அது வாங்குவோருக்குச் செலுத்தப்படும் மற்றும் குறைவு ஏதும் இருப்பின், அத்தகைய குறைவு முழுவதையும் வாங்குவோர் செலுத்த வேண்டும். பிஎப்எல் முடிவு செய்தவாறு பிஎப்எல் தம் விருப்புரிமையில் குறைவு தொகையை தவணையை சரி செய்வதன் மூலம் குறைவுத் தொகையை வாங்குவோர் செலுத்த அனுமதிக்கலாம். குறைவுத் தொகை முழுதும் செலுத்தப்படும் வரை இங்கு மேலே குறிப்பிடப்பட்ட பின் தேதியிட்ட காசோலைகளைக் காசாக்க பிஎப்எல்-க்கு உரிமை உள்ளது.

(5) பொருள் சேதமுற்றால் மற்றும் தமது விருப்புரிமையில் அந்த சேதம் முழுதும் மராமத்து செய்ய முடியுமென்று பிஎப்எல் கருதினால் அந்தப் பொருளின் மராமத்துக்காக வசூலித்த காப்பீடுத் தொகையை விடுவித்து மற்றும் ஒப்பளிக்கப்பட்ட கடனை அதன் மூல வரையீடுகளின் படி தொடரலாம்.

**24.** பிணையம்

(1) ஒப்பளிக்கப்பட்ட கடன், வட்டி, கூட்டு / அபராத வட்டி, கட்டணம், செலவினங்கள் மற்றும் எல்லா பிற தொகைகள் எவ்வாறாயினும் இங்கு பிஎப்எல்-க்கு வாங்குவோரால் வாங்குவோரின் செலுத்தப்பட வேண்டிய நிலுவை உள்ளிட்ட வரையறையற்றது, பிஎப்எல்-க்குரிய முதல் மற்றும் தனிப் பற்று பொறுப்பில் உள்ள பொருளால் (பகுதி பி அட்டவணையில் முழுதும் விவரிக்கப்பட்டவாறு) கைப்பற்றப்படலாம்.

(2) அந்த சொல்லப்பட்ட பிணையத்தை (வாகனத்தை) தவறுதலில் பிஎப்எல்-க்கு பிஎப்எல்-ன் அறிவிப்பு அல்லது கேட்பு இன்றி சரண் செய்யப்பட வாங்குவோர் இங்கு ஒப்புக் கொள்கிறார்.

**25.** தவறுதல் நிகழ்வு

இந்த ஒப்பந்தத்தில் அடங்கிய வரைமொழிகள் மற்றும் கடமைகள் வாங்குவோர் நிறைவேற்றத் தவறினால் தவறுதல் செய்யப்பட்டதாகக் கருதப்படலாம் மற்றும்

(1) மாதாந்திர தவணை அல்லது அதன் பகுதி மற்றும் / அல்லது இந்த ஒப்பந்தத்தின் வரையீடுகளின்படி பிஎப்எல்-க்கு செலுத்த வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய உரிய எந்த பிற தொகைகள் நிலுவையானால் மற்றும் / அல்லது நடப்பில் உள்ள அல்லது வாங்குவோர் மற்றும் பிஎப்எல் இடையே இனி ஏற்படுத்தப்படும் எந்த பிற ஒப்பந்தங்கள் / ஆவணங்கள் வரையீடுகளின்படி எந்த ஒரு தவறுதல் நிகழ்ந்தால்.

(2) பிஎப்எல்-க்கு வாய்மொழியாக அல்லது எழுத்து மூலம் வாங்குவோர் ஏதாவது தவறாக கூற்று செய்தது கண்டுபிடிக்கப்பட்டால்.

(3) பொருள் பறிமுதல், கைப்பற்றுதல், பொறுப்பில் எந்த அதிகாரி, அமைப்பு அல்லது பிற நபரால் எடுக்கப்பட்டால் எந்த நடவடிக்கைக்கும் உட்படுத்தப்பட்டால் அல்லது கோரப்படாவிட்டால், ஆபத்து ஏற்படுத்துமாயின், திருடப்பட்டால் அல்லது சேதப்படுத்தப்பட்டால் அல்லது எந்த மூன்றாம் நபருக்கும் உடல் ரீதியாக காயம் விபத்து மூலம் ஏற்பட்டால் அல்லது

(4) வாங்குவோர் இறந்தால், நொடிப்பு நிலையாக மாறினால் / அவரது கடனாளருடன் சமரசம் செய்தால் அல்லது எந்த கைப்பற்றுதலையும் அனுமதித்தால் தனித்து வைத்தால் அல்லது அவரது சொத்துக்கள் அல்லது உடைமைகளுக்கு எதிராக பிற நடவடிக்கைகள் எடுத்தால்.

(5) வாங்குவோர் கூட்டாண்மை நிறுவனமாக இருந்தால், எந்த பிற கூட்டாளி நொடிப்பு நிலையானால் அல்லது அவரது கடனாளியுடன் சமரசமானால் அல்லது எந்த கைப்பற்றுதலையும் அனுமதித்தால் அல்லது தனிமைப்படுத்தினால் அல்லது நிறுவனத்தின் பங்கு உள்ளபடி அவரது உடைமைகள் அல்லது சொத்துக்களுக்கெதிராக பிற நடவடிக்கைகள் எடுத்தால்.

(6) வாங்குவோர் லிமிடெட் கம்பெனியாக இருந்து தாமாக மூட தீர்மானம் நிறைவேற்றினால் அல்லது அதற்கு எதிராக மூட மனு தாக்கல் செய்திருந்தால் அல்லது அதன் கடனாளர்களிடம் சமாதானமாக ஏதேனும் திட்டம் இருத்தால் அல்லது அதனை ஏற்று சொத்து பொறுப்பாட்சியர் நியமிக்கப்பட்டிருந்தால் அல்லது அதன் எந்த உடைமையும் அல்லது சொத்துக்களும் அல்லது உடைமைகளும் அல்லது சொத்து பற்றுகை செய்யப்பட்டால் அல்லது தனிமைப் படுத்தப்பட்டால் அல்லது அதர்கெதிராக வேறு வகையான நடைமுறை இருந்தால் அல்லது நலிந்த தொழில் கம்பெனிகள் (சிறப்பு வகையீடு) சட்டம், 1985ன் கீழ் எதிர்மறை நிகரம் குறித்து அறிவிக்க வாங்குவோர் பொறுப்பாக நேர்ந்தால் அல்லது எந்த அபராதம் மற்றும் புதிய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டால்.

(7) பிஎப்எல் நலன் அல்லது பிணையத்தை உருக்குலைக்கும் என பிஎப்எல்-ன் கருதும் சூழ்நிலைகள் இருக்குமானால் அல்லது

(8) பிஎப்எல் உடன் வாங்குவோர் / கூட்டாக வாங்குவோர் / பொறுப்புறுதியாளராக பிற எந்த ஒப்பந்தத்தின் கீழ் வாங்குவோர் தவறுதல் செய்திருந்தால். தவறுதல் நிகழ்வு நடந்த பின்னர் வாங்குவோருக்கு எவ்வித அறிவிப்புமின்றி வாங்குவோரின் நிலுவை பிஎப்எல்-க்கு செலுத்தப்பட வேண்டியதாகும். வாங்குவோரின் நிலுவை அல்லது அதன் எந்தப் பகுதியையும் வாங்குவோர் செலுத்தத் தவறினால், பிஎப்எல் ஆல் நிதி உதவி செய்யப்பட்ட பொருளினை (அட்டவணை பகுதி பி ல் முழுதும் விவரிக்கப்பட்டது) பிஎப்எல் அல்லது அதன் பிரதிநிதியிடம் உடன் சரண் செய்ய வாங்குவோர் ஒப்புக் கொள்கிறார். (அல்லது பிஎப்எல்-ஆல் ஏற்கப்பட்ட அத்தகைய மதிப்புடைய எந்த பொருளையும் பிஎப்எல்-ன் முழு நிலுவையையும் திருப்தி செய்யக் கூடியது மற்றும் பிஎப்எல் வாங்குவோர் சார்பாக அதனை தீர்வு செய்ய உரிமை உண்டு மற்றும் அதன் வருவாயை வாங்குவோரின் நிலுவைக்கு சரி செய்யலாம். இதில் ஏதேனும் ஏற்பட்டால் அதனை வாங்குவோருக்குச் சரி செய்ய வேண்டும். மேலே சொன்னவற்றிற்கு எந்த பாதிப்புமின்றி மற்றும் அதன் கூடுதலாக, பின் தேதியிட்ட காசோலைகள், இசிஎஸ் / ஏடிஎம் / பிற மின்னணு அல்லது பிற தீர்வு முறைகள் இங்கு குறிப்பிடப்பட்டது போல் ஒப்பந்தத்தின் கீழ் நிலுவையாக உள்ள எல்லா தொகையும் முழுதும் செலுத்தப்பட்டு மற்றும் ஊர்தி கடன் ஒப்பந்தம் இறுதி முடிவு செய்யும் வரை காசாக்க பிஎப்எல்-க்கு உரிமையுண்டு.

(9) இங்குள்ள வரையீடுகள் மற்றும் நிபந்தனைகளின்படி பிஎப்எல்-க்கு வாங்குவோரால் தரப்பட்ட அல்லது தரப்படவுள்ள எந்த முன் தேதியிட்ட காசோலையும் எந்த காரணம் கொண்டும் காசாக்கப்படாமலிருந்தால் அல்லது

(10) எந்தக் காரணமாயிருந்தாலும் வகைப்பாடு 11ல் தரப்பட்ட பிடிசி / இசிஎஸ் / ஏடிஎம் / எந்த பிற மின்னணு அல்லது பிற தீர்வு முறை மூலம் தந்ததை நிறுத்தக் கோரி வாங்குவோர் எந்த அறிவு ரையும் வழங்கினால்

(11) பொருளின் (வாகனம்) புதுப்பித்தல், காப்பீடு நகல், சொத்தின் பதிவுச் சான்றின் நகலை வழங்க வாங்குவோர் தவறினால், அல்லது

(12) இந்த ஒப்பந்தத்தின் வகைக்கூறுகளின்படி சொத்தின் விபரங்களை தாக்கல் செய்ய வாங்குவோர் தவறினால்

**26.** தவறுதல் நேர்கையில் நிவாரணம்

மற்றவற்றிற்கு குந்தகமின்றி, அதே போல் சட்டத்தின் கீழ் பிற உரிமைகள் மற்றும் நிவாரணங்கள் அல்லது தகைமை நெறியில் அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் கீழ்க்கண்டவை உள்ளது.

(1) முழு கடனையும் திரும்பப் பெற மற்றும் வாங்குவோருக்கெதிராக நடவடிக்கை எடுக்க பிஎப்எல்-க்கு முழு உரிமை உண்டு.

(2) பிடிசி, இசிஎஸ் / ஏடிஎம் பிற எந்த மின்னணு அல்லது பிற தீர்வு முறை நடைமுறையில் நடவடிக்கை செல்லாததாக ஆகும் தவறுதல் நிகழ்வில் மாற்று ஆவண சட்டம் 1881 பிரிவு 138ன் கீழ் வாங்குவோரால் வழங்கப்பட்ட காசோலைகள் ஏற்கப்படாமைக்கு அல்லது செலுத்துதல் மற்றும் தீர்வு அமைப்பு சட்டம், 2007ன் கீழ் பிஎப்எல் சட்டப்படியான நடவடிக்கையை எடுக்கலாம்.

(3) உரிமையியல் நடைமுறை சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் உள்ள உரிய வகைக்கூறுகளின்படி மற்றும் அல்லது பிற எந்த சட்டம் இயற்றப்பட்ட தன் கீழ் அல்லது நடைமுறையில் உள்ளதின் படி பிஎப்எல்-ன் நலனைப் பாதுகாக்க பிற சட்டபூர்வ நிவாரணங்களை எடுப்பதற்கு பிஎப்எல்-க்கு உரிமை உண்டு.

(4) பிஎப்எல்-ன் பிற உரிமைகளுக்கு குந்தகமின்றி, இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய எந்த தொகையையும் வாங்குவோர் அந்த தவறுதலின் 7 நாட்களுக்குள் அல்லது செலுத்த வேண்டிய மற்றும் நிலுவையாக உள்ள அத்தகைய தொகையை செலுத்தத் தவறினால் அல்லது எந்த தவறுதல் நிகழ்வு நடந்தாலும் வாங்குவோர் கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தோர் / பொறுப்புறுதியாளர் அல்லது சட்ட பூர்வ வாரிசுகள் அத்தகைய தவறுதலின்று 15 நாட்களுக்குள் பொருளை சரண் செய்யத் தவறினால் அல்லது அத்தகைய தொகை நிலுவையாக மற்றும் செலுத்த வேண்டியதாக வரும்போது அல்லது பிஎப்எல்-க்கு தவறுதல் நிகழும் போது, பிஎப்எல் / அதன் முகவர்கள் / அதன் பிரதிநிதிகள் அந்தப் பொருளை (அட்டவணை பகுதி பி ல் முழுதும் விவரிக்கப்பட்டவாறு) உடைமையைப் பெற உரிமையுடையவர்கள் மற்றும் பிஎப்எல்-ன் பிணையத்தை நிலை நிறுத்தவும் மற்றும் வாங்குவோரின் நிலுவையை வசூலிக்கவும் அந்தப் பொருளை தீர்வு செய்ய அல்லது செயல்படுத்தலாம் பிஎப்எல் பிரதிநிதிகள் அந்தப் பொருளை உடைமையாக்கும் போது தடுக்க அல்லது தடை செய்வதில்லை என வாங்குவோர், கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தோர் / பொறுப்புறுதியாளர் அல்லது சட்டபூர்வ வாரிசுகள் ஒப்புக் கொண்டு மற்றும் உறுதிமொழி எடுத்துள்ளனர் மற்றும் எங்கு பொருள் இருப்பிடத்திலுள்ளதோ அந்த வளாகத்தில் தடையற்ற நுழைவு உரிமை பிஎப்எல்-ன் பிரதிநிதிகளுக்கு உண்டு. பிஎப்எல், விற்க, வாடகைக்கு விட அல்லது அந்தப் பொருளை வேறு விதமாக பொது விற்பனை அல்லது தனி விற்பனை அல்லது எந்த இழப்புக்கும் பொறுப்பின்றி தனி ஒப்பந்தம் செய்து கொள்ளவும் மற்றும் விற்பனை வருவாயை முதலில், அத்தகைய வாடகை அல்லது செயல்படுத்துதலில் ஏற்பட்ட எல்லா செலவுகளை திருப்தியாக ஏற்கவும், இரண்டாவதாக பிஎப்எல்-க்கு வாங்குவோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி மீதி மற்றும் பிற தொகைகளுக்கும் மற்றும் ஒப்பளிக்கப்பட்ட கடனின் அசல் தொகை நிலுவைக்கும் நிகர வருவாயை ஒதுக்க பிஎப்எல்-க்கு உரிமை உண்டு.

(5) பிஎப்எல்-க்கு எப்போதும் உள்ள எந்த பிற நிவாரணத்திற்கும் குந்தகம் வராமல், ஒப்பளிக்கப்பட்ட கடன் திரும்பப் பெறப்பட்டாலும், கூட இந்த ஒப்பந்தத்தின் கீழ் வாங்குவோர் எந்தத் தொகையும் செலுத்தவில்லை என்ற அச்சம் அல்லது பிஎப்எல்-ன் பிணையம் உருக்குலையும் என பிஎப்எல் கருதும் பட்சத்தில் பொருளை உடைமையாக்கிக் கொள்ள பிஎப்எல்-க்கு உரிமை உண்டு.

(6) பிஎப்எல் அந்தப் பொருளை உடைமையாக்கி கொள்ள உரிமையுடையது மற்றும் அந்தக் காரணத்திற்காக இங்கு மேலே உள்ள 26(4) வகைப்பாட்டில் குறிப்பிட்டவாறு எந்த வளாகத்தினுள்ளும் நுழையலாம்.

(7) மூன்றாம் நபர் அக்கறை உள்ள அல்லது நலன் கோரும் மேல் சொன்ன (அட்டவணை பகுதி பி யில் முழுவதும் விவரிக்கப்பட்டவாறு) முடிவு செய்யப்பட்ட எந்த பொருட்களும் அல்லது சொத்தைப் பொறுத்து மூன்றாம் நபர் கோரிக்கைக்கெதிராக பிஎப்எல்-க்கு வாங்குவோர் ஈட்டுறுதி செய்ய வேண்டும்.

**27.** இசைவுத் தீர்வு

இந்த ஒப்பந்தத்தின் கீழ் எழும் எல்லா பிரச்சனைகள், கருத்து வேறுபாடுகள் மற்றும் / அல்லது கோரிக்கைகள் இந்த ஒப்பந்தம் நடப்பல் இருந்தாலும் அல்லது பின்னர் இருந்தாலும் அது இசைவுத் தீர்வு மற்றும் சமரசம் சட்டம், 1996ல் கண்ட வகைக்கூறுகளின்படி அல்லது அதற்கான சட்டபூர்வ திருத்தத்தின்படி இசைவுத் தீர்வு மூலம் தீர்க்கப்பட வேண்டும் மற்றும் பிஎப்எல்-ஆல் நியமிக்கப்பட்ட இசைவுத் தீர்வாளரின் தனி இசைவுத் தீர்வுக்கு அனுப்பப்பட வேண்டும். அந்த நடவடிக்கையின் மொழி ஆங்கிலமாக இருக்க வேண்டும். அத்தகைய இசைவுத் தீர்வாளரால் தரப்பட்ட தீர்வு இறுதியானது மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள எல்லா நபர்களையும் கட்டுப்படுத்தும் நியமிக்கப்பட்ட இசைவுத் தீர்வாளர் இறந்தால் அல்லது செயலாற்ற இயலாது போனால் அல்லது இசைவுத் தீர்வாளராக எந்தக் காரணத்தினாலே செயல்படாது போனால் இசைவுத் தீர்வாளரின் அத்தகைய இறப்பில் அல்லது அவரின் இயலாமை அல்லது இசைவுத் தீர்வாளராக செயலாற்ற விருப்பமில்லாத போது பிஎப்எல் மற்றொரு நபரை இரசவுத் தீர்வாளராகச் செயல்பட நியமிக்கலாம். தமது முந்தைய நபர் விட்ட இடத்திலிருந்து மேலும் தொடர அத்தகைய நபருக்கு உரிமை உண்டு. இசைவுத் தீர்வு நடவடிக்கை எடுக்கும் இடம் பூனாவாக (மகாராஷ்ட்ரா மாநிலம்) இருக்கும் மற்றும் வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் இதற்கு இசைந்து மற்றும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

**28.** பிணைய / பொருளை உடைமையாக்குதல் மற்றும் தீர்வு செயல்தல் (அட்டவணை பகுதி பி யில் முழுதும் விவரிக்கப்பட்டவாறு)

(1) தவறுதல்கள் நிகழும் போது (வகைப்பாடு 25ல் குறிப்பிட்டவாறு) அட்டவணை பகுதி பி ல் விவரிக்கப்பட்ட அந்த சொல்லப்பட்ட பொருளை உடைமையாக்க நடவடிக்கை வாங்குவோருக்கெதிராக பிஎப்எல் அல்லது அதன் முகவர்கள் / பிரதிநிதிகளால் (வகைப்பாடு 26(4) இந்த வகைப்பாட்டின் ஒரு பகுதியாக இருக்கும்) நடவடிக்கை எடுக்கப்பெறும்.

(2) அந்த சொல்லப்பட்ட பொருளினை உடைமையாக எடுக்க நடவடிக்கை எடுப்பதற்கு முன் (அட்டவணை பகுதி பி ல் முழுதும் விவரிக்கப்பட்டவாறு,) வாங்குவோருக்கும் பிஎப்எல் ஆல் வாய்மொழி அல்லது எழுத்து மூல தகவல் சாதாரண தபால் மூலம் செய்யப்பட வேண்டும்.

(3) அந்த பொருளை உடைமையில் எடுக்கும் காரணத்திற்காக அந்தப் பொருள் அமைந்துள்ள அல்லது காணப்படுன்ற இடத்தின் அதிகார வரம்புக்குள் வரும் காவல் துறைக்கு பிஎப்எல் தெரிவிக்க வேண்டும் அல்லது மாறாக அமைதியான முறையில் நேரடியாக பிஎப்எல்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முகவர்கள் / பிரதிநிதி உடைமையாக எடுப்பார்.

(4) அப்பொருளை உடைமையாக எடுத்த பின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முகவர்கள் / பிரதிநிதிகள் அந்த சொத்து / பொருளின் விபரங்களை குறிப்பெடுத்து பட்டியிலிடுவார்.

(5) குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் பொறுப்பினை வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தோர் செயலாற்றத் தவறினால் பிஎப்எல் ஒழுங்கான முறையில் அப்பொருளை முயற்சி செய்து தீர்வு காணும்.

(6) வாங்குவோர் / பொறுப்புறுதியாளரால் நேரடியாக மற்றும் மறைமுகமாக மரியாதை மற்றும் கண்ணியம் பராமரிக்கப்படுவதற்கு உள்ளிட்டு நடைமுறை முழுதும் பிஎப்எல்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மற்றும் பிஎப்எல்-ன் பிரதிநிதிகள் மரியாதை மற்றும் கண்ணியத்தைக் கடைபிடிப்பார்.

(7) ஏற்றுக் கொள்ளக் கூடிய வணிகமொழியில் வாங்குவோருடன் தொடர்பு முறை இருத்தல் வேண்டும்.

(8) பொருளை உடைமையாக எடுக்கும் போது கூட ஒப்பந்தத்தின் வரையீடுகள் மற்றும் நிபந்தனைகள் தொடரும் மற்றும் வாங்குவோர், கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் மற்றும் பொறுப்புறுதியாளரின் கடமைகள் / பொறுப்புகளைப் பாதிக்காது. விற்பனைக்கு முன்பு கடன் தொகையின் வாங்குவோர் பொறுப்பாக இருக்கும் முன் கூட்டி முடித்தல் தொகை உடைமையினை எடுக்கும்போது வாங்வோரிடமிருந்து செலுத்த வேண்டிய நிலுவை சமமானதாக இருத்தல் வேண்டும்.

(9) நிலுவைகளை (முன் கூட்டி முடித்தல் தொகை) செலுத்த / கட்ட வாங்குவோர் தவறும் பட்சத்தில் மீதமுள்ள நிலுவை, பொருள் விற்றபின், ஏதாவது இருப்பின் வாங்குவோரிடமிருந்து வசூலிக்க பிஎப்எல்-க்கு உரிமை உண்டு. ஏதாவது கூடுதல் தொகை பொருள் விற்பனை மூலம் கிடைக்கப் பெற்றால், வாங்குவோருக்கு எதிராக பிஎப்எல்-ஆல் எவ்வித கோரிக்கையும் இல்லையென்றால் எல்லா தொடர்புடைய செலவுகளை கழித்து வாங்குவோருக்குத் திருப்பப்படும். ஏதாவது குறைவு இருப்பின் அது வாங்குவோர், பொறுப்புறுதியாளர், கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர் உடனே எவ்வித தாமதம் அல்லது தவறுதல் இன்றி தீர்க்க / கட்ட வேண்டும்.

(10) பிஎப்எல் ஆல் உடைமை எடுக்கப்படும் பொருளின் விற்பனை (அட்டவணை பகுதி பி ல் முழுதும் விவரிக்கப்பட்டவாறு) பல வாங்குவோரிடமிருந்து கோரிக்கை சேகரித்தும் / தனி நபர் வழியாகவும் / அல்லது இணையதள விற்பனையாளர் மூலமாகவும் வெளிப்படையான நடைமுறை மூலம் நடைபெற வேண்டும். அத்தகைய விற்பனை நடவடிக்கை செய்யப்படும் முன் நிலுவையிலுள்ள முழுமையும் (முன் கூட்டி முடித்தல் மதிப்பு) பிஎப்எல்-ஆல் செலவிடப்பட்ட எல்லா தொடர்பான செலவினங்களையும் 7 நாட்களுக்குள் செலுத்தக் கோரி வாங்குவோர் மற்றும் பொறுப்புறுதியாளருக்கு அனுப்ப வேண்டும். தனி நபர் ஒப்பந்தம் அல்லது பொது / தனியார் விற்பனை மூலம் செய்யப்பட்ட விற்பனைக்கு பிஎப்எல் தனது தனி விருப்புரிமையில் அந்த விற்பனை நடவடிக்கை தொடர்பாக செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் செலவினங்களை வசூலிக்க பிஎப்எல்-க்கு உரிமை உண்டு அத்தகைய செலவு, செலவினங்கள், கிடங்கு வாடகை உள்பட, அத்தகைய செலவைப் பொறுத்து செலுத்தப்பட வேண்டிய வெளிச் செலவு அல்லது தரகு போன்றவை கூடுதலாக இருக்கும். அத்தகைய தரகினைச் செலுத்த விற்பனை வருவாய் போதுமானதாய் இல்லையெனில், வாங்குவோர், பொறுப்புறுதியாளர், கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணபித்தவர், பிஎப்எல் கேட்பு செய்யும் போது அதனைச் செலுத்திட வேண்டும்.

(11) இசைவுத் தீர்வாளர் வழியே வகைப்பாடு 27ன் கீழ் செய்த மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பொருந்தக் கூடிய நீதிமன்ற நடைமுறை மூலம் விற்பனையில் ஏற்பட்ட குறைவினை / இழப்பினை வசூல் செய்யும் உரிமையை பிஎப்எல் தொடர்ந்து செயல்படுத்தும்.

(12) இந்திய ரிசர்வ் வங்கியால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தகவல் கழகம் / பணியகம் மற்றும் இதன் சார்பில் இந்தியன் ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட எந்த பிற முகமைக்கும் முழு விவரங்கள், வாங்குவோரின் பொருள் / வாகனம் விற்பனையில் நஷ்டம், கூட்டாக வாங்குவோர், வாங்குவோர் சார்பாக பொறுப்புறுதியாளருக்குள்ள பொறுப்பு, முழுதும் மற்றும் இறுதியாக கேட்பு செய்யும் போது தீர்வு செய்ய கூட்டாக வாங்குவோர் இயலாதது ஆகியவற்றை பகிர்ந்து கொள்ள / அனுப்ப பிஎப்எல் தனது உரிமையை தொடர்ந்து செயல்படுத்தும் கடன் வசதிக் கழகம் மற்றும் / அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்த பிற முகமையும், பிஎப்எல் ஆல் சரியென கருதும் எந்த வகையிலும் சொல்லப்பட்ட மேல் சொன்ன தகவல் மற்றும் புள்ளி விபரங்களையும் பயன்படுத்தலாம் மற்றும் / அல்லது பரிசீலிக்கலாம் மற்றும் வாங்குவோர் கூட்டாக வாங்குவோர், பொறுப்புறுதியாளர் இதற்கு முழுமையாக ஒப்புக் கொள்கின்றனர்.

**29.** உரிய நாளில் தவணையை பிஎப்எல்-க்கு வாங்குவோர் செலுத்துதல் பிஎப்எல் உள்ளுர் கிளை / பகுதிஅலுவலகம் அல்லது பிஎப்எல்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் / பிரதிநிதிகள் அல்லது பிஎப்எல் பதிவு அலுவலகம் பஜாஜ் பினான்ஸ் லிமிடெம் ஆகுர்டி மும்பை - பூனே ரோடு, பூனே 411 035 மகாராஷ்டிரா மாநிலத்திற்கு பதிவுத் தபால் மூலமும் செலுத்தலாம்.

30. இந்த ஒப்பந்தத்தைப் பொறுத்து வாங்குவோர், பொறுப்புறுதியாளர், கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவருக்கு அனுப்பப்படும் எந்த அறிவிப்பும் அது வாங்குவோர், பொறுப்புறுதியாளர், கூட்டாக வாங்குவோர், கூட்டாக விண்ணப்பித்தவர்க்கு சார்பு செய்தால் அல்லது சாதாரண தபாலில் அனுப்பினால் அல்லது வாங்குவோர் உள்ள ஒப்பந்த அட்டவணையில் சொல்லப்பட்ட வாங்குவோர் முகவரியில் விடப்பட்டால் அல்லது கடைசியாக தெரிந்த வணிக மற்றும் தனியார் முகவரிக்கு தந்தால் அது செல்லத்தக்க விதத்தில் சார்பு செய்ததாகக் கொள்ளப்படும். சாதாரணத் தபாலில் அனுப்பப்பெறும் எந்த அத்தகைய அறிவிப்பும் அது அனுப்பப்பட்ட 48 மணி நேரத்தில் வாங்குவோரால் பெறப்பட்டதாக கருதப்படும்.

31. அட்டவணை "ஏ" ல் குறிப்பிட்டவாறு உரிய நாட்களில் எல்லா தவணைகளையும் பிஎப்எல்-க்கு வாங்குவோர் செலுத்திய பின் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிஎப்எல்-க்கு வாங்குவோரால் செலுத்தப்பட வேண்டிய எல்லா பிற தொகைகளையும் மேலும் செலுத்திய பின், ஒப்பளிக்கப்பட்ட கடன் முடிவுக்கு வரும்.

32. மீதமுள்ள நிலுவைத் தொகை மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் வாங்குவோர் செலுத்தப்பட வேண்டியது குறித்து பிஎப்எல் வழங்கும் எந்த கணக்கு அறிக்கையும் வாங்குவோரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் மற்றும் கட்டுப்படுத்தக் கூடியது மற்றும் அதில் கூறப்பட்ட தொகையின் சரியான தன்மைக்கு இறுதியான சான்றாக அமையும். மேலே என்ன சொல்லப்பட்டதோ அதற்குப் பாதகமின்றி, எந்த அறிக்கையை அல்லது அதன் பகுதியை வினவ வாங்குவோர் விரும்பினால் அது பெறப்பட்ட 7 நாட்களுக்குள் முழு விபரத்தினையும் பிஎப்எல்-க்கு வாங்குவோர் பிஎப்எல் பதிவு பெற்ற அலுவலகம் உள்ள பஜாஜ் பினான்ஸ் லிமிடெம் ஆகுர்டி மும்பை - பூனே ரோடு, பூனே 411 035 மகாராஷ்டிரா மாநிலம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் வாங்குவோர் அனுப்ப வேண்டும் மற்றும் பிஎப்எல் அதனைப் பரிசீலிக்கும் மற்றும் அதன் பின்னர் எவ்வித காரணம் கொண்டும் அதனை ஆட்சேபிக்க வாங்குவோருக்கு உரிமை இல்லை. பிஎப்எல்-ஆல் வழங்கப்பட்ட கணக்கு சரியற்றது என்ற காரணம் அல்லது எந்த பிற காரணம் கொண்டு தவணைகள் செலுத்துவதில் தாமதம் அல்லது தவறுதல் செய்ய வாங்குவோருக்கு உரிமை இல்லை என தெளிவு படுத்தப்படுகிறது.

33. இந்திய ரிசர்வ் வங்கியின் கோரிக்கைகளின் படி கம்பெனி நியாய நடைமுறை கோட்பாடு உருவாக்கியுள்ளது என பிஎப்எல் தெரிவித்து அறிவிக்கிறது. அது கம்பெனியின் அனைத்து அலுவலகத்திலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது மற்றும் எப்போதும் வாங்குவோர், பொறுப்புறுதியாளர் கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர் பார்வையிடலாம். அது கம்பெனியின் வலைத் தளத்தில் காட்டப்பட்டுள்ளது. அதாவது www.bajajfinance.com அல்லது www.bajajautofinance.com.

34. வாங்குவோரின் கோரிக்கையின் பேரில், பிஎப்எல் கடனை முன் கூட்டியே முடிக்கலாம். வாங்குவோர் முன் கூட்டி முடித்தலை விரும்பினால் அந்த நாளில் உள்ள அசலில் 3%க்கு மிகாமல் முன் கூட்டி முடித்தல் கட்டணத்தை (பிற எல்லா பொருந்துக் கூடிய வரிகள் மற்றும் சட்ட பூர்வ விதிகள், ஏதாவது இருப்பின் கூடுதலாக விதிக்கப்படும்) பிஎப்எல் விதிக்கலாம்.

35. பிஎப்எல்-க்கு உள்ளுர் தீர்வு வங்கியாளருடன் செய்ய வங்கி ஏற்பாடு இல்லாத இடத்தில் வாங்குவோர் இருந்தால் மற்றும் வாங்குவோர் பின் தேதியிட்ட காசோலைகள் கொடுத்திருந்தால், வாங்குவோர் தவணையுடன் கூட வெளியிட வசூல் அவரால் தரப்பட்ட காசோலை நிர்வாக செலவாக ஒரு காசோலைக்கு 100/-க்கு மிகாமல் செலுத்த ஒப்புக் கொள்கிறார்.

36. வழங்குதல் அட்டவணை, வட்டி வீதம், பணி விதிப்புகள், முன் செலுத்தல் கட்டணம் மற்றும் பிற உள்ளிட்ட வரையீடுகள் மற்றும் நிபந்தனைகளில் ஏற்படும் மாறுதல் குறித்து பிஎப்எல் வாங்குவோருக்கு அறிவிப்பு செய்ய வேண்டும். வட்டி வீதங்கள் மற்றும் விதிப்புகளில் மாறுதல் எதிர்காலத்திற்கு மட்டுமே அமுல்படுத்தப்படுவதை பிஎப்எல் உறுதி செய்ய வேண்டும். மேல் சொன்ன மாறுதல் வாங்குவோரைக் கட்டுப்படுத்தும் மற்றும் அதனை எதிர்க்கக்கூடாது.

37. உரிமைகள் வழங்கல்

(1) பிஎப்எல்-ன் எழுத்து மூல இசைவின்றி, இந்த ஒப்பந்தத்தின் கீழ் அதன் உரிமைகள் மற்றும் கடமைகளை வாங்குவோர் மாற்ற உரிமையில்லை. அவரது பயன்பாடு தவிர எந்த முறையிலும் எவ்வாறிருந்தாலும் வாங்குவோர் மாற்றவோ அல்லது வழங்கவோ அல்லது பொருளை பிறவாறு செயல்படுத்தக்கூடாது.

(2) எல்லா செலவுகளும் (வழக்கறிஞர் செலவு உள்ளிட்ட வரையறையற்ற) தீர்வைகள், செலவினங்கள், வரிகள், விதிப்புகள் இதன் தொடர்ச்சியாக இந்த ஒப்பந்தம் தொடர்பாக எழுதிக் கொடுக்கப்பட்ட எந்த ஆவணங்களின் முத்திரைக் கட்டணம் உட்பட உருவாக்குதல், அமுல்படுத்துதல், பெறுதல் அல்லது பிணையம் மற்றும் காப்பீடு வருவாய் பெறும் முயற்சி, உடைமை எடுப்பது அல்லது பராமரிப்பது, சேமிப்பது மற்றும் பொருள்களை விற்பது ஆகியவை வாங்குவோரே ஏற்று மற்றும் செலுத்த வேண்டும்.

(3) பிஎப்எல் எங்கு நிதி உதவி பெற்றுள்ளாரோ அந்த வங்கிகள் அல்லது நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து கேட்பு ஏதும் செய்யப்பட்டால் வாங்குவோர் அத்தகைய வங்கிகளுக்கு / நிதி நிறுவனங்களுக்கு நேரடியாக தவணையைச் செலுத்தலாம். அந்தப் பொருளின் மீதான உரிமை ஏதும் இருப்பின் அது உள்பட அவர்களது எந்த நிலுவையையும் வசூல் செய்யும் அத்தகைய வங்கிகள் / நிதி நிறுவனங்களின் உரிமைகளில் தடங்கள் செய்யும் எதனையும் செய்யமாட்டேன் அல்லது செய்ய காரணமாயிருக்க மாட்டேன் என வாங்குவோர் ஒப்புக் கொள்கிறார்.

(4) தவணைகளைப் பெறும் உரிமை மற்றும் விற்பனை, மாற்றம், பிணையம் செய்தல், பற்றுப் பொறுப்பு அல்லது பிணையமாக அல்லது பிறவாறு எந்த நபருக்கு அல்லது நிறுவனத்துக்கு செய்தல் உள்பட இந்த ஒப்பந்தத்தின் கீழ் எந்த அல்லது அதன் எல்லா உரிமைகள், பயன்கள், கடமைகள், பொறுப்புகள் மற்றும் கடமைகளை வழங்க / மாற்றி ஒதுக்கீடு செய்ய பிஎப்எல்-க்கு உரிமை உண்டு மற்றும் பிஎப்எல்-ஆல் அவ்விதம் ஒதுக்கீடு வழங்கப்பட்டால், வாங்குவோர், பொறுப்புறுதியாளர், கூட்டாக வாங்குவோர், கூட்டாக விண்ணப்பித்தவர் இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள கடமைகளை அத்தகைய ஒதுக்கீட்டாளர்களுக்கு செய்ய வேண்டும்.

38. இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிஎப்எல் மீது வாங்குவோரின் கூட்டாக வாங்குவோரின் / கூட்டாக விண்ணப்பித்தவரின் / பொறுப்புறுதியாளரின் நுகர்வோர் பிரச்சனைகள் உள்ளிட்ட எந்த சட்ட நடவடிக்கையும் மகாராஷ்டிரா மாநிலம் பூனாவில் உள்ள நீதிமன்றங்களில் மட்டுமே எடுக்க மற்றும் தாக்கல் செய்யப்பட வேண்டும். அந்த நீதிமன்றங்கள் மட்டுமே தனி வரம்புடையன ஆனால், வாங்குவோர், கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர், பொறுப்புறுதியாளர் முழுதும் ஒப்புக் கொண்டால் மகாராஷ்ட்ரா மாநிலத்தில் உள்ள பூனா உள்பட நாட்டின் எந்த பாகத்திலும் வாங்குவோர், கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர் / பொறுப்புறுதியாளருக்கெதிராக குற்றவியல் / உரிமையியல் நடவடிக்கைகள் / வழக்குகள் தாக்கல் / தொடர முழு உரிமையும் பிஎப்எல்-க்கு உண்டு.

39. தமக்கு உரியது மற்றும் தேவையானது எனக் கருதும் எல்லாம் அல்லது சிலவற்றை வெளியிட பிஎப்எல்-க்கு உரிமையுண்டு.

(1) வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர் தொடர்பான தகவல் மற்றும் புள்ளி விபரங்கள்.

(2) பிஎப்எல்-க்கு சாதகமாக வாங்குவோர் / பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவரால் தரப்பட்ட வசதி, கடன் வரையீடுகள் மற்றும் / அல்லது சொத்துக்கள் ஏதேனும் இருந்தால், தொடர்பான தகவல் மற்றும் புள்ளி விபரங்கள்.

(3) கடன் வரையீடுகளின் கீழ் வசதி தொடர்பாக வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தோரால் கடமைகள் ஏற்கப்பட்டது / ஏற்கப்பட உள்ளது அல்லது பிஎப்எல்-ஆல் எந்த பிற கடன் வசதி வழங்கப்பட்டது / வழங்கப்பட உள்ளதற்காக வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவரின் சொத்துக்கள் / உற்பத்திப் பொருள் ஏதும் இருந்தால்.

(4) மேல் சொன்ன கடமைகளை நிறைவேற்ற தவறுதல் ஏதும் வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தோரால் (வாங்குவோரின் பொறுப்பு) செய்யப்பட்டிருப்பின் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட கடன் கழகம் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட எந்த பிற முகமைக்கும் தெரிவிக்கலாம். கடன் தகவல் கழகம் மற்றும் / அல்லது எந்த பிற முகமை அவ்விதம் அங்கீகரிக்கப்பட்டது அவர்களால் சரியெனக் கருதும் முறையில் பிஎப்எல் ஆல் வெளியிடப்பட்ட மேல் சொன்ன தகவல் மற்றும் புள்ளி விவரங்களை பயன்படுத்தலாம் / அல்லது ஆய்வு செய்யலாம். கடன் கழகம் மற்றும்/ அல்லது எந்த பிற முகமை அவ்விதம் அங்கீகரிக்கப்பட்டது ஆய்வு செய்யப்பட்ட தகவல்கள் மற்றும் புள்ளி விபரங்கள் அல்லது அவர்களால் தயார் செய்யப்பட்ட பொருள்கள் ஆகியவற்றை பரிசீலிக்க பிஎப்எல் / நிதி நிறுவனங்கள் மற்றும் பிற கடன் வழங்குபவர்கள் அல்லது இதன் சார்பில் இந்திய ரிசர்வ் வங்கியால் கூறப்பட்டவாறு பதிவு செய்யப்பட்ட பயன்படுத்துவோருக்கு வழங்கலாம். அவ்வப்போது வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக மனு செய்தோர் பிஎப்எல்-க்கு வழங்கிய எல்லா தகவல்களும் மற்றும் புள்ளி விவரங்களும் உண்மையானது மற்றும் சரியானது.

40. இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவரது கடமை ஒவ்வொன்றும் தனித் தன்மை வாய்ந்தது மற்றும் பிறவற்றிலிருந்து பிரிக்கக் கூடியது என வாங்குவோர், பொறுப்புறுதியாளர், கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர் ஒப்புக் கொள்கின்றனர். எந்தக் காரணத்திற்காகவாவது எந்த கடமையும் நீதிமன்றத்தால் நிலை நிறுத்த முடியாததாக அறிந்தால் வாங்குவோர் / பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர் இங்கு குறிப்பிடப்பட்ட பிற கடமைகளை நிறைவேற்ற தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டவர்.

41. இந்த ஒப்பந்தத்தின் கீழ் வட்டி வீதம், அபராத விதிப்பு, பணித் தீர்வை மற்றும் செலுத்த வேண்டிய பிற தீர்வைகள் மற்றும் அல்லது வாங்குவோரால் செலுத்தப்படுவதாக ஒப்புக் கொள்ளப்பட்டது நியாயமானது மற்றும் அவரால் ஏற்றுக் கொள்ளக் கூடியது என்பதை வாங்குவோர் ஒப்புக் கொள்கிறார்.

42. வாங்குவோர் பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர் கல்வியறிவு இல்லாத மற்றும் அல்லது அவன்/அவள் / அது / அவர்களால் கடன் வழங்கும் போது படித்து மற்றும் புரிந்து கொள்ள இயலாத நேர்வில் கடன் ஒப்பந்தத்தின் பொருள் உள்ளுர் மொழியில் முழுதுமாக விளக்கப்பட்டது மற்றும் அதன் பின்னர் தான் அவன் / அவள் / அவர்கள், அவன் / அவள் / அவர்கள் கையொப்பத்தினையும் கை பெருவிரல் ரேகையையும் வைத்துள்ளனர். எங்கு வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர் ஆங்கிலத்தைப் படிக்க முடியாதோ அந்த பிற எல்லா நிகழ்வுகளில் உள்ளுர் மொழியில் வரையீடுகளும் நிபந்தனைகளும் தரப்பட்டு மற்றும் புரிந்து கொண்ட பின்னர் மற்றும் அவற்றை ஒப்புக் கொண்டு, அவன் / அவள் / அவர்கள் கையொப்பமிட்டு மற்றும் பெருவிரல் ரேகை வைத்து வரையீடுகள் மற்றும் நிபந்தனைகளை வாங்குவோர் / பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தோர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

43. இந்த ஒப்பந்தம் அட்டவணை மற்றும் எந்த பிற இங்கு இணைக்கப்பட்ட ஆவணங்கள் அல்லது இங்கு சுட்டிக் காட்டப்பட்டவை, இங்கு குறிப்பிட்ட எல்லா வரையீடுகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது இங்கு அதன் தொடர்பானவற்றை ஒருங்கிணைக்கிறது மற்றும் ஒப்பந்தத்தின் அந்த வகைக்கூறுகள் ஒப்புதல் கடிதம், இந்த ஒப்பந்தத்தின் வரையீடுகளின் படி கூடதலாக மற்றும் தொடர்ச்சியான மற்றும் அதுவேயல்லாது அல்லது மோதல் ஏற்படுத்தாத இந்த ஒப்பந்தத்திற்கு முன்னர் வெளியிடப்பட்ட அல்லது எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைய ஆவணங்கள் தவிர எல்லா வாய்மொழி பேச்சு வார்த்தை மற்றும் இங்குள்ள பொருள் தொடர்பான முந்தைய எழுத்துக்களை ஒதுக்கி வைக்கிறது. இந்த ஒப்பந்தத்தன் வரையீடுகள், நிபந்தனைகள் மற்றும் வகைக்கூறுகள், மற்றும் பிற எந்த ஒப்பந்தங்கள் அல்லது இங்கு இணைக்கப்பட்ட ஆவணங்கள் அல்லது இங்கு குறிப்பிடப்பட்டவற்றுக்கிடையே மோதல் ஏற்படுமாயின் பின்னர் அத்தகைய நிகழ்வில் இந்த ஒப்பந்த அட்டவணை வரையீடுகள், நிபந்தனைகள் மற்றும் வகைக்கூறுகள், கடன் காலத் தாள் / கடன் ஒப்பளிப்பு முன் நிற்கும்.

44. பிஎப்எல்-க்கு வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தோர், எல்லா அறிவிப்புகள், ஆணைகள், அழைப்பாணைகள், தகவல் கடிதம், வழக்குகள் ஏதும் சார்வு செய்ய / தாக்கல் செய்ய வேண்டுமெனில் அது பிஎப்எல் என தற்போது பதிவு அலுவலகம் உள்ள பஜாஜ் பினான்ஸ் லிமிடெம் ஆகுர்டி பழைய மும்பை பூனா நெடுஞ்சாலை, பூனே 411 035 மகாராஷ்டிரா மாநிலம் என்ற முகவரிக்கு மற்றும் பதிவுத் தபால் / விரைவுத் தபாலில் மட்டுமே அனுப்ப வேண்டும். எந்த வகை தொடர்பு / தகவல் அதன் கிளைகள், பகுதி அலுவலகம் அல்லது அதன் முகவர்கள் மற்றும் பஜாஜ் ஆட்டோ லிமிடெட் விற்பனையாளர்கள், அதன் சேவை மையம் உள்ளிட்ட வெளி வழிகள் ஆகியவற்றுக்கு அனுப்பப்படுபவற்றை பிஎப்எல் ஏற்காது / கருதாது மற்றும் வாங்குவோர் பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தோர் இதற்கு ஒப்புக் கொள்கின்றனர்.

45. பிஎப்எல் வழங்கும் வாடிக்கையாளர் சேவை

சேவை தொடர்பான பிரச்சனைகக்கு வாடிக்கையாளர் பிஎப்எல்- உடன் கீழ்க்கண்டவாறு தொடர்பு கொள்ளலாம்.

(1) வாடிக்கையாளர் சேவை எண்கள் 09225811110 அல்லது 18002092235 அல்லது தரைவழி எண் 33005000 முன்னர் பகுதி அலுவலகத்தின் நகர எஸ்டிடி எண் சேர்க்கவும்.

(2) பதிவு அலுவலகத்தில் உள்ள வாடிக்கையாளர் குறை தீர்க்கும் பிரிவைக் கோரலாம். தலைமை வாடிக்கையாளர் சேவை, பஜாஜ் பினான்ஸ் லிமிடெட் ஆகுர்டி பழைய மும்பை பூனா நெடுஞ்சாலை, பூனே 411 035 மகாராஷ்டிரா மாநிலம்.

(3) bflcustomercare @ bajajauto.co.in என்ற முகவரிக்கு மின் அஞ்சல் அனுப்பவும்.

(4) பதிவு அலுவலகத்தில் உள்ள வாடிக்கையாளர் குறை தீர்க்கும் பிரிவிற்கு பதிவுத் தபால் / விரைவு தபாலில் எழுதலாம். பஜாஜ் பினான்ஸ் லிமிடெம் ஆகுர்டி, பூனே 411 035 மகாராஷ்டிரா மாநிலம். உதவி எண்கள் மற்றும் குறைகள் தீர்க்கும் பிரிவு குறித்த சமீபத்திய விவரங்கள் www.bajajfinance.com அல்லது www.bajajautofinance.com -ல் உள்ளது. பதிவு அலுவலகத்தல் உள்ள குறை தீர்க்கும் பிரிவின் செயல்பாட்டில் வாடிக்கையாளர் திருப்தியடைய வில்லையென்றால் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

2ம் கட்டம்:-

தலைவர், வாடிக்கையாளர் சேவை, பஜாஜ் பினான்ஸ் லிமிடெட், ஆகுர்டி, பழைய மும்பை பூனா நெடுஞ்சாலை, பூனா 411 035, மகாராஷ்டிரா மாநிலம் என்ற முகவரிக்கு எழுதவும் அல்லது bflcustomercare @ bajajauto.co.in என்பதற்கு மின் அஞ்சல் அனுப்பவும். 7 வேலை நாட்களுக்குள் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

மூன்றாம் கட்டம்:-

பொறுப்பு அதிகாரி, பஜாஜ் பினான்ஸ் லிமிடெட், ஆகுர்டி, பழைய மும்பை பூனா நெடுஞ்சாலை, பூனா 411 035, மகாராஷ்டிரா மாநிலம் என்ற முகவரிக்கு பொறுப்பு அதிகாரிக்கு எழுதவும், bflnodalofficer@ bajajauto.co.in என்ற முகவரிக்கு மின் அஞ்சல் செய்யவும். நீங்கள் 7 வேலை நாட்களுக்குள் பதில் பெற்றுக்கொள்வீர்கள்.

46. ஏற்பு

வாங்குவோர், பொறுப்புறுதியாளர் / கூட்டாக வாங்குவோர் / கூட்டாக விண்ணப்பித்தவர் கீழ்க்கண்டவாறு உறுதி கூறுகின்றனர்.

(1) அட்டவணையில் தரப்பட்ட விவரங்கள் உள்ளிட்ட முழு ஒப்பந்தத்தையும் (பக்கம் ------------ முதல் ----------- வரை) அவர்கள் படித்துள்ளனர். அது அவர்களால் பூர்த்தி செய்யப்பட்டு அவர்கள் முன்னிலையில் ஒப்பமிடப்பட்டுள்ளது. விபரங்கள் உள்பட எல்லா நிபரந்தனைகளுக்கும் அவர்கள் கட்டுப்பட்டவர்கள்.

(2) இந்த ஒப்பந்தம் மற்றும் பிற ஆவணங்கள் அவர்களுக்கு அவர்கள் புரிந்து கொள்ளும் மொழியில் விளக்கி கூறப்பட்டு மற்றும் அவர்கள் எல்லா வகைப்பாடுகளின் முழுப் பொருளையும் அறிந்து கொண்டுள்ளனர்.

(3) இந்த ஒப்பந்தம் முடிவுற்றது மற்றும் இந்த ஒப்பந்தத்தில் பிஎப்எல்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஒப்பமிட்ட நாள் முதல் சட்ட பூர்வமாக கட்டுப்படுத்துவதாக அமையும் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

(4) இந்த ஒப்பந்தத்தின் கீழ் செய்ய வேண்டியதை பிஎப்எல் செய்யத் தவறினால், இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிஎப்எல்-ன் உரிமையைத் தள்ளுபடி செய்ததாகக் கருத முடியாது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

(5) எந்த வகைப்பாடுகள், இந்த ஒப்பந்தத்தின் அட்டவணைகளின் பொருள் விளக்கத்தில் ஆங்கில மொழி ஒப்பந்தமே முன் நிற்கும் என அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

(6) வரையீடுகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அட்டவணைகளின் ஒரு நகல் (உள்ளுர் மொழி & ஆங்கிலம்) பிஎப்எல்-டமிருந்து அவர்களால் பெறப்பட்டு மற்றும் அவற்றை உள்ளுர் மொழி & ஆங்கில மொழியில் பெறப்பட்டது உறுதி / ஒப்புகை செய்யப்படுகிறது.

இந்த நாளான ------------------ மாதம் மற்றும் ஆண்டில் சாட்சிகளுடன் எல்லா நபர்களும் இதில் ஒப்பமிட்டுள்ளனர்.

வாங்குவோரின் கையொப்பம் / பெருவிரல் ரேகை (இடது கை)

--------------------------------------------------------------------------------------------------------------------------------

வாங்குவோரின் பெயர்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

பெட்டிக்குள் கையொப்பம் இடவும்

சாட்சியின் கையொப்பம்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

சாட்சியின் பெயர்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

முகவரி

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

என் முன்னால் கையொப்பமிடப்பட்டது

என் முன்னால் பெருவிரல் ரேகை வைக்கப்பட்டது

--------------------------------------------------------------------------------------------------------------------------------

கூட்டாக வாங்குவோரின் கையொப்பம்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

முகவரி

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

பொறுப்புறுதியாளரின் பெயர்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

முகவரி

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

சாட்சியின் கையொப்பம்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

சாட்சியின் பெயர்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

முகவரி

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------

என் முன்பாக கையொப்பம் இடப்பட்டது

என் முன்பாக பெருவிரல் ரேகை வைக்கப்பட்டது

பஜாஜ் பினான்ஸ் லிமிடெட்-க்காக

அங்கீகரிக்கப்பட்ட ஒப்பமிடுவோர்

# <u>உறுதிச் சீட்டு</u>

ரூபாய் ------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

கோரப்படும் போது ---------------------------------------------------------------------------------------------------------------- ஆகிய நான் / நாங்கள் பஜாஜ் பினான்ஸ் லிமிடெட்க்கு அல்லது ஆணையின் பேரில் ரூ. ------------------------------------ (ரூபாய் --------------------------------------- மட்டும்) மதிப்பு பெற்றதற்காக செலுத்த உறுதி கூறுகிறேன்.

நாள் --------------------------- மாதம் ------------------------------ ஆண்டு

ஒட்டுக

வாங்குவோரின் கூட்டாக வாங்குவோரின் கையொப்பம் கையொப்பம் ரூ. 1 ரெவினியூ ஸ்டாம்ப்

கம்பெனியாக இருந்தால் கம்பெனியின் பொது முத்திரை இடப்பட வேண்டும்

நாள் ---------------- ------------------

# ஊர்தி கடன் ஒப்பந்தத்தின் பகுதியான அட்டவணை

கருத்துரு எண் ____________________ ஒப்பந்த நாள் ____________________

வாங்குவோரின் பெயர் ____________________

முகவரி ____________________

____________________

கூட்டாக விண்ணப்பித்தவர் பெயர் ____________________

முகவரி ____________________

____________________

பொறுப்புறுதியாளர் பெயர் ____________________

முகவரி ____________________

____________________

பகுதி ஏ ____________________

விற்பனையாளர் பெயர் ____________________

முகவரி ____________________

____________________

பகுதி பி

பொருள் விபரம் ____________________ உற்பத்தியாளர் ____________________

விபரம்: மாதிரி ____________________ உற்பத்தி செய்த ஆண்டு ____________________

எஞ்சின் எண் ____________________ சேசிஸ் எண் ____________________

பதிவு எண் ____________________

1. நிதி உதவி செய்த தொகை / கடன் ____________________

நிதி விதிப்புகள் / வட்டி ____________________ (ஒப்ந்தத்தின் வகைப்பாடு (5) மற்றும் (6) காண்க)

மொத்தம் ____________________ காலம் ____________________

தவணை ____________________ முதல் தவணை உரிய நாள் ____________________

2. திரும்பியதற்கு அபராத விதிப்பு ரூ.350/- வரை தவறுதல் / மாதத்திற்கு மற்றும் தாமத செலுத்தல் அபராதம் உரிய நிலுவைத் தொகையில் 3%க்கு மிகாமல்

3. பொருளின் காப்பீடு செய்யும் மதிப்பு ரூ. ____________________

4. (i) (*) முன் தவணை ரூ ____________________

முழுத் தவணை பிரிநிதித்துவம் ____________________மற்றும் ____________________

பகுதி ____________________ தவணை

(*) கடைசி தவணையில் ____________________முதல் ____________________ வரை சரி செய்யப்படும்

பிணைய வைப்பீடு ரூ ____________________

(i) ____________________ வைப்பீடு மீது வட்டி ____________________ % பின் தேதியிட்ட காசோலைகள்

விவரம்

| வங்கி | வ.எண் | காசோலை எண் | | காசோலை நாள் | காசோலை தொகை | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|
| | | முதல் | வரை | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

(ii) கட்டளை படிவம் இசிஎஸ் (பற்று தீர்வு)

| வங்கியின் பெயர் | தவணைத் தொகை | காலம் (மாதம் / இருமாதம் ஒருமுறை / காலாண்டு) |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

கணக்கு வைத்திருப்பவர் பெயர் ____________________

கூட்டாக கணக்கு வைத்திருப்பவர் பெயர் (இருந்தால்) ____________________

கணக்கு எண் ____________________

எம்.ஐ.சி.ஆர் கோட் ____________________

---------------------------- ---------------------------------------------

வாங்குவோர் கையொப்பம் பஜாஜ் பினான்ஸ் லிமிடெட்-க்காக மற்றும் சார்பில் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பமிடுவோர்

நாள்

அனுப்புநர்

----------------------

----------------------

----------------------

பெறுநர்

பஜாஜ் பினான்ஸ் லிமிடெட்

மும்பை - பூனா ரோடு

ஆகுர்டி, பூனே 411 035.

அன்பார்ந்த ஐயா,

என்னுடைய கோரிக்கையின் பேரில் தாங்கள் வழங்கிய கடனை காண்க. நான் ஏற்கனவே சம்பந்தப்பட்ட கடன் ஒப்பந்தம் நாள் --------------ல் கையொப்பம் செய்துள்ளேன் மற்றும் அதனை தங்களுக்கு அனுப்பியுள்ளேன். நமது கடன் ஒப்பந்தம் தொடர்ச்சியாக தங்களுக்குச் சேர வேண்டிய செலுத்துதல் தொகைக்காக உங்களுக்கு சாதகமாக ஈடு செய்வதன் மூலம் பிணையமாக எனக்கு / எங்களுக்குச் சொந்தமான வாகனம் / உற்பத்திப் பொருள் தர நான் / நாங்கள் விரும்புகிறோம்.

என் / எங்களது மாதாந்திர தவணை செலுத்துதலில் தவறுதல் ஏற்பட்டால் தங்களால் நிதி உதவி செய்யப்பட்ட பொருளை நான் / நாங்கள் சரண் செய்யத் தவறினால், எங்கு அந்த சொல்லப்பட்ட சொத்து வைக்கப்பட்டுள்ளதோ அல்லது இருப்பு வைக்கப்பட்டுள்ளதோ அந்த வளாகத்தினுள் நுழையும் காரணத்திற்கும் அந்தப் பொருளை உடைமையாக எடுத்துச் செல்லவும் நான் / நாங்கள் கம்பெனியை அங்கீகரிக்கிறோம். அந்தப் பொருளை உடைமையில் எடுத்துக் கொண்டு, என் சார்பாக சிறந்த உத்தேச விலையில் கம்பெனி "அவ்வாறே எங்குள்ளதோ" அடிப்படையில் (எந்த பொருள் சொத்து உள்ள அல்லது பொருளுடன் இணைக்கப்பட்டுள்ள பொருளின் பகுதியாக) விற்கலாம்.

நன்றியுடன்

தங்களின் நம்பிக்கையுள்ள

வாங்குவோரின் ஒப்பம் --------------------

பெயர் -----------------------

---

பெறுநர்

வட்டார போக்குவரத்து அதிகாரி

ஐயா,

பொருள் : மோட்டார் வாகனம் எண் ______________________________

குறித்து தடையின்மைச் சான்றிதழ்______________________________

நான் / நாங்கள், மேல் சொன்ன மோட்டார் வாகனத்தை ______________________________க்கு ______________________________ அன்று விற்றுவிட்டேன். வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ______________________________க்கு மாறுதல் மேற்கொள்ள தடையின்மைச் சான்றிதழ் வழங்கத் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றியுடன்

தங்கள் நம்பிக்கையுள்ள

----------------------

நாள் ---------------

பெறுநர்

பஜாஜ் பினான்ஸ் லிமிடெட்

----------------------------

அன்பார்ந்த ஐயா

பொருள் : கருத்துரு எண் ____________________ நாள் ____________________________ நிதித் தொகை ______________________________

பொருள் விபரம் _____________________________ உற்பத்தி வாகன பதிவு எண் _______________________________

மேற்சொன்ன நிதியின் அட்டவணைப் படுத்தப்பட்ட திருப்பிச் செலுத்துதலில் தவறுதல் காரணமாக நான் கடன் ஒப்பந்தத்தின் கீழுள்ள வரையீடுகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதால் கடன் ஒப்பந்தத்தின் கீழ் பஜாஜ் பினான்ஸ் லிமிடெட்க்கு வழஙகப்பட்ட உரிமைகளின் படி _____________________________________________ நிதி உதவியாளர் / பஜாஜ் பினான்ஸ் லிமிடெட்க்கான உடைமை திரும்ப பெறும் முகமையிடம் அந்த சொல்லப்பட்ட பொருளினை தாமாகவே நான் இங்கு சரன் செய்கிறேன். முன் கூட்டி முடித்தல் மதிப்பு முழுதையும் 10 நாட்களுக்குள் பஜாஜ் பினான்ஸ் லிமிடெட்க்கு செலுத்த நான் முடியுமென்றால் பஜாஜ் பினான்ஸ் லிமிடெட் அந்த சொல்லப்பட்ட பொருளை "இருந்தவாறு" "எங்குள்ளதோ" நிலைமையில் திருப்பித் தரும் என மேலும் நான் அறிந்து கொண்டு மற்றும் ஒப்புக் கொள்கிறேன்.

மேலே சொன்னவாறு 10 நாட்களுக்குள் நான் செலுத்த முடியவில்லையென்றால் பஜாஜ் பினான்ஸ் லிமிடெட் என் சார்பாக அந்தப் பொருளை சுதந்திரமாக விற்கலாம் மற்றும் அதன் நிலுவைகளுக்கெதிராக விற்பனை வருவாயை ஒதுக்கீடு செய்து பெற்றுக் கொள்ளலாம் அவ்விதம் பெறப்பட்ட தொகையில் குறைவு ஏற்படின், அத்தகைய குறைவினை நான் ஈடு செய்து மற்றும் பஜாஜ் பினான்ஸ் லிமிடெட்க்கு முழுதும் மற்றும் இறுதியாக நிலுவைகளை செலுத்தி தீர்வு செய்வேன்.

வாங்குவோர் கையொப்பம் ____________________________

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-

## <u>விற்பனை ரசீது</u>

எனது ---------------------------------------------------------------------------------------------------------------------------------------- விற்பனை செய்ததின் முழு மதிப்பான ------- ----------------------------------- தொகை ரூ.--------------- (ரூபாய் ------------------------------ மட்டும்) நன்றியுடன் திரு ------------------------------------------- டமிருந்து பெற்றுக் கொண்டு இந்நாளில் பொருளை வழங்கிவிட்டேன். இந்த ரசீதுடன் நடவடிக்கை முடிவுற்றது மற்றும் தொகை ரொக்கமாகப் பெறப்பட்டுள்ளது.

| வருவாய் முத்திரை ரூ.1 |
|---|

வருவாய் முத்திரை குறுக்கே கையொப்பமிடவும்

பெயர் :

முகவரி :